வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=


# ஈழநாடு

Eelanadu வீர மலர் ඊළනාඩු






Email : news@eelanadu.lk | மலர் : 01 | 05.09.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 275 | பக்கங்கள் : 20


08 மூலோபாய நலனை நோக்கிய புதுடில்லி – கொழும்பின் நகர்வு






09 கனடா அரசியலில் தமிழர்கள்





11 உலக ஒழுங்கை மாற்றிய இரட்டை கோபுர தாக்குதல்


16 சங்க இலக்கியங்களை திராவிட களஞ்சியம் என்ற பெயரில் வெளியிட திட்டமா?


# தமிழ் கட்சிகளின் சார்பில் ஐ.நாவுக்கு 4 அறிக்கைகள்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 05

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் அடுத்த வாரம் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், தமிழ்க் கட்சிகளின் சார்பில் 4 அறிக்கைகள் தனித் தனியாக மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

19

## 3,333 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்

கொழும்பு, செப். 05

நாட்டில் நேற்று 3 ஆயிரத்து 333 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 59 ஆயிரத்து 459 ஆக எகிறியுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 310 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

19

## 46/1 பிரேரணையின் பின்னரும் தமிழருக்கு எதிராக நடவடிக்கை!

### மனித உரிமைகள் ஆணையாளருக்கு 5 தமிழ் தேசிய கட்சிகள் கூட்டாக கடிதம்

யாழ்ப்பாணம், செப். 05

“இலங்கையில் கொரோனா கட்டுப்பாடுகள், மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களை அதிகளவில் பயன்படுத்தும் அதிகாரிகள், அமைதியான முறையில் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கான உரிமையை கட்டுப்படுத்துவதுடன், தமிழ் மக்களை ஒடுக்குமுறைக்குள்ளாக்கும் சம்பவங்களும் தொடர்ந்துகொண்டுள்ளன” என ஐந்து தமிழ்க் கட்சிகளின் சார்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பி

19

### புலிகளும் மீறல்களில் ஈடுபட்டனர்

## தமிழ் அரசு கடிதத்தால் கட்சிக்குள் முரண்பாடு!

### இரு அணிகளாக கடிதம் அனுப்ப முடிவு

யாழ்ப்பாணம், செப். 05

விடுதலைப் புலிகளும் மனித உரிமைகள், போர் குற்றங்களில் ஈடுபட்டனர் என்று தமிழ் அரசு கட்சி மனித உரிமைகள் ஆணையாளருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. இதையடுத்து அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரு அணி

19

## வடக்கில் 102 தொற்றாளர்

### போதனா மருத்துவமனை ஆய்வக முடிவு

யாழ்ப்பாணம், செப். 05

மன்னார் முசலி மருத்துவ அதிகாரி பிரிவில் 24 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 102 தொற்றாளர்கள் உறுதிசெய்யப்பட்டனர்.

யாழ். போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் 437 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்

19

## பி.சி.ஆர். எடுக்க மறுத்து குழப்பம்; காரைநகரில் மூன்று பேர் கைது!

யாழ்ப்பாணம், செப். 05

பி. சி. ஆர். எடுப்பதற்கு மறுப்பு தெரிவித்ததுடன், காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரியையும் தாக்க முயன்ற குற்றச்சாட்டில் மூன்று பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

19



## கோதுமைக்கும் தட்டுப்பாடு

கொழும்பு, செப். 05

கோதுமை மாவுக்கும் தற்போது சந்தையில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், அத்தியாவசிய பொருட்களை பதுக்குதல் மற்றும்

19

## 10 ஆயிரத்தை நெருங்கியது கொரோனா மரணங்கள்

கொழும்பு, செப். 05

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 145 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன அறிவித்துள்

19

## அடக்குமுறை, அச்சுறுத்தலை அரசாங்கம் நிறுத்தவேண்டும்

### சர்வதேச யூரர்கள் ஆணைக்குழு வலியுறுத்து

ஜெனிவா, செப். 05

கோவிட் - 19 வைரஸ் பரவல் நெருக்கடியை அரசாங்கம் கையாளும் முறை தொடர்பில் விமர்சனங்களை முன்வைத்தமைக்காக அரச அதிகாரிகள், மருத்துவ நிபுணர்கள் மற்றும் சமூக

19






உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

ஒருவன் தற்கொலைக்கு முயற்சி செய்யும்போது அவனைப் பிடித்து நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

“ஏன் தற்கொலைக்கு முயற்சி செய்தாய்? இது குற்றம் என்று உனக்கு தெரியாதா?”, என்று நீதிபதி அவனிடம் கேட்டார்.

அதற்கு அவன் சொன்னான், “எல்லாம் குடும்பப் பிரச்னைதான் காரணம் ஐயா”, என்று.

“யாருக்குத்தான் குடும்பப் பிரச்னை இல்லை. அப்படி என்னதான் உன் பிரச்னை?”, என்று மீண்டும் கேட்டார் நீதிபதி.

அதற்கு அவன் தனது சோகக் கதையைக் கூறத் தொடங்கினான்.

“நான் ஒரு விதவையை திருமணம் செய்து கொண்டேன் வீட்டில் யாருக்கும் தெரியாமல். ஏற்கனவே அவளுக்கு திருமண வயதில் ஒரு பெண் இருந்தாள். அந்த பெண்ணை என் தகப்பனார் காதலித்து எனக்கே தெரியாமல் திருமணம் செய்து கொண்டார். அதாவது என் தகப்பனார் எனக்கே மாப்பிள்ளை ஆனார்.

“என் தகப்பனாரை திருமணம் செய்து கொண்டதால் என் ஒன்று விட்ட மகள் எனக்கு சித்தி ஆனாள். காலம் ஓடியது.

“என் மனைவி ஒரு பிள்ளை பெற்றாள். அவன் என் தகப்பனாருக்கு மைத்துனன் ஆனான்.

“என் சித்தியின் சகோதரன் ஆதலால் என் மகன் எனக்கு மாமன் ஆனான்.

“என் தகப்பனாரின் மனைவி ஒரு பிள்ளை பெற்றாள். அவன் எனக்கு சகோதரன்.

“அவனே எனக்கு பேரனும் ஆனான். என் மகளின் மகன் அல்லவா? அதே போல் என் மனைவி என் பாட்டியானாள். என் சித்திக்கு தாய் அல்லவா?

“நான் என் மனைவிக்கு கணவனாகவும், பேரப்பிள்ளையாகவும் ஒரே சமயத்தில் இருக்க வேண்டியதாயிற்று. ஒருவனுடைய பாட்டிக்கு கணவனாக இருப்பவன் அவனுக்கு தாத்தா ஆகிறான் அல்லவா? அப்படி பார்த்தால் நான் எனக்கே தாத்தாவாகிறேன். இக்குழப்பமே என் தற்கொலைக்கு காரணம்.”

நீண்ட தன் சோகக் கதையைச் அவர் சொல்லி முடித்தான்.

அவனது கதையைக் கேட்ட நீதிபதி இப்போது தற்கொலை செய்யாத குறை.

நாட்டில் இப்போது வெளிவந்துகொண்டிருக்கின்ற செய்திகளைப் படிக்கின்றபோது இந்தக் கதைதான் ஞாபகத்திற்கு வருகின்றது.

நாடு பொருளாதார நெருக்கடியில் இருக்கிறது என்பது என்னவோ உண்மைதான் என்பதை ஆளும் தரப்பும் இப்போது ஏற்றுக்கொள்கின்றது.

ஆனால், நாடு பொருளாதார நெருக்கடியால் முற்றாக முடங்கப்போகின்றது என்று வருகின்ற செய்திகளை அரச தரப்பு ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. ஆனால், நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கின்றது என்பது மட்டும் புலப்படுகின்றது.

நாட்டுக்கு எரிபொருள் வருவது எந்த நேரத்திலும் நின்றுவிடலாம் என்கின்றது எதிர்க்கட்சி. நாட்டின் டொலர் கையிருப்பு சுத்தமாக முடிந்துகொண்டிருப்பதால், எரிபொருளையும் நீண்டகால கடனில் பெறவேண்டிய நிலையில் அரசாங்கம் இருக்கின்றது என்பதை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். அதுதான் கட்டார் நாடு நீண்டகால கடனுக்கு எரிபொருளை கொடுக்க சம்மதம் தெரிவித்திருக்கின்றது என்ற செய்திகள் வருகின்றன.

சீனி விலை சாதாரண மக்களால் மாத்திமல்ல, நடுத்தர மக்களுக்கும் எட்டாப் பொருளாகிக் கொண்டிருக்கின்றது.

அதற்கு தீர்வாக கரும்பு உற்பத்தி கிராமங்களை அமைத்து சீனியை உற்பத்தி செய்யவிருக்கிறோம் என்கிறார் துறைசார்ந்த இராஜாங்க அமைச்சர் ஒருவர். அவரின் கூற்றுப்படி பார்த்தால் கரும்பு நட்டு சீனி உற்பத்தி செய்து நமக்கு கிடைக்கும் வரை சீனி கிடைக்காது என்பதை புரிந்து கொள்ளமுடிகின்றது.

கொரோனா நெருக்கடி வேறு மக்களை உலுப்பி எடுத்துக் கொண்டிருக்கின்றது. போதாக்குறைக்கு அது சார்ந்த அமைச்சர் சுதர்ஷினி அம்மையாரோ, இரண்டு முகக் கவசங்களை கட்டாயம் அணியுங்கள் என்கிறார். தினசரி இரண்டு முகக்கவசங்களுக்கே எதையாவது அடைவு வைக்கவேண்டிய நிலை.

அவசரமாக எனது கணனிக்கு ஒரு சிறிய பொருள் வாங்க வேண்டும். இங்கு கிடைக்கவில்லை என்பதால் அமேசனில் வாங்குவோம் என்று முயன்றால் கிறெடிற் காட் ஐம்பது டொலர்களை செலுத்தவும் மறுக்கின்றது. வங்கிகளில் டொலர்கள் இல்லாத குறை.

நாட்டின் எதிர்காலம்பற்றிய செய்திகளை கேட்க கேட்க மேலேயுள்ள கதைதான் ஞாபகத்திற்கு வருகின்றது.

தலைசுற்றாத குறை.!

- ஊர்க்குருவி

# மன்னாரில் மின்தகன மயானம் அமைக்க உதவுமாறு கோரிக்கை!

மன்னார், செப். 05

மன்னாரில் மின் தகன மயானம் ஒன்றை அமைப்பதற்கு உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதற்காக நிதி தேவைப்படுவதாகவும் அரச சார்பற்ற அமைப்புகள், புலம்பெயர்ந்தவர்கள், செல்வந்தர்கள் முன்வந்து உதவி செய்யுமாறு மாவட்ட அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் கோரியுள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் கோவிட்-19 மரணங்கள் அதிகரித்து வருகின்றன. இதனால், சடலங்களை மின் தகனம் செய்வதற்காக வவுனியாவுக்கு கொண்டு செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. வாகனத்திற்கு பணம் கொடுத்து சடலங்களை அனைவராலும் ஏற்றி வர முடியாது என்பதினால் வாகனம் ஒன்றை கொள்வன வு செய்யவும் சுமார் 30 மில்லியன் ரூபாய் நிதி தேவைப்படுகிறது.

நிதி போதாமை காரணமாக அரச சார்பற்ற அமைப்புக்கள், வெளிநாட்டில் உள்ள நண்பர்கள், தனவந்தர்கள் முன் வந்து உதவி செய்ய முன்வர வேண்டும் என கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளது. நிதி உதவி செய்ய விரும்புவோ, இலங்கை வங்கியின் 939526 என்ற கணக்கு இலக்கத்திற்கு பணத்தை வைப்பிலிட முடியும் என்றும் மேலும் தெரிவிக்கப் பட்டது. (ஐ)

## ‘தமிழ் மாலை’ காணொலி வழி கருத்துரை இன்று

யாழ்ப்பாணம்,செப்.5

அவுஸ்திரேலியா தமிழ்ச்சங்கம் வழங்கும் தமிழ்மாலை காணொலிவழி கருத்துரை மற்றும் கலந்துரையாடல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இணைய வழி ஊடாக இடம்பெறவுள்ளது.

மூத்த எழுத்தாளர் மாத்தளை சோமு நெறியாள்கையில் இடம் பெறவுள்ள நிகழ்வில், “தமிழ்க் காப்பியங்களில் மகளிர் வீரப் பண்பு” எனும் தலைப்பில் பேராசிரியர் பா.ஆனந்தகுமார் (தமிழ்நாடு- காந்தி கிராம கிராமிய நிகழ் நிலைப் பல்கலைக்கழகம்) உரையாற்றவுள்ளார்.

இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ள விரும்பும் இலக்கிய ஆர்வலர்கள் அடையாள எண்:- 83866209861, கடவுச் சொல்- 290099 ஊடாக ZOOM இல் இணைந்துக்கொள்ளலாம்

## நியூசிலாந்து தாக்குதல் 22 முஸ்லிம் அமைப்புகள் கடும் கண்டனம்

கொழும்பு, செப். 05

நியூசிலாந்தின் ஒக்லன்ட் பகுதியில் இலங்கையர் ஒருவர் மேற்கொண்ட கத்திக் குத்துத் தாக்குதலை இலங்கை முஸ்லிம் சிவில் அமைப்புகள் கண்டித்துள்ளன.

நியூசிலாந்துத் தாக்குதலுக்கு இலங்கையின் 22 முஸ்லிம் சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து கண்டனம் வெளியிட்டுள்ளன.

நியூசிலாந்தில் வசித்த இலங்கையரின் தீவிரவாதத் தாக்குதல் தமக்கு அதிர்ச்சி மற்றும் கவலையை ஏற்படுத்தியுள்ளது என முஸ்லிம் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

தீவிரவாத நடவடிக்கைகள் எந்தவொரு இன, மத, கலாசாரத்துடனும் தொடர்புடையவை அல்ல எனும் நியூசிலாந்து பிரதமரின் கருத்துடன் தாம் உடன்படுவதாகவும் இலங்கை முஸ்லிம் அமைப்புகள் தெரிவித்துள்ளன. (இ)

கல்வி tv CHANNEL-1

### 06.09.2021 ஞாயிற்றுக்கிழமை

| நேரம | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

### 06.09.2021 ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
05.09.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# காத்தான்குடி ஐ.எஸ்.ஐ.எஸ். ஆதரவாளர்

நியூசிலாந்தில் கத்திக்குத்து தாக்குதலில் ஈடுபட்டு, பின்னர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஐ. எஸ். ஐ. எஸ். ஆதரவாளர், காத்தான்குடியை சேர்ந்தவர் என்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த சில வருடங்களாக நியூசிலாந்து புலனாய்வு பிரிவினரால் கண்காணிக்கப்பட்ட குறித்த நபர், சந்தைக் கட்டடம் ஒன்றில், அப்பாவி மக்களை கத்தியால் தாக்கியதைத் தொடர்ந்து பொலிஸாரால் சுடப்பட்டிருக்கின்றார். இந்த சம்பவம் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் ஐ. எஸ். ஐ. எஸ். என்ற சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பின் கருத்தியலால் ஈர்க்கப்பட்ட ஆதரவாளர்கள் இருக்கின்றனர் என்பதற்கு மேலும் ஒரு சான்றாகியிருக்கின்றது.

2019இல் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் பெரியளவில் முன்னேற்றம் இல்லாத நிலையில், இலங்கைக்கான கர்தினால் மல்கம் ரஞ்சித், தொடர்ந்தும் அது தொடர்பில் கேள்வி எழுப்பி வருகின்றார். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் இலங்கையை, சேர்ந்த முஸ்லிம் நபர் ஒருவர், நியூசிலாந்தில் தாக்குதலில் ஈடுபட்டிருக்கின்றார். இதற்கிடையில், அண்மையில் ஆப்கானிஸ்தானை தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருக்கும் தலிபான் அமைப்பின் பேச்சாளர், சுஹைல் ஷகீன், தாம், காஷ்மீர் முஸ்லிம்களுக்காகவும், அதேவேளை ஏனைய நாடுகளில் வாழும் முஸ்லிம் மக்களுக்காகவும் குரல் கொடுப்போம் என அறிவித்திருக்கின்றார்.

தலிபான்கள் மீளவும் எழுச்சியடைந்திருக்கும் நிலையிலும், அண்மையில் காபூல் விமான நிலையத்தில் அமெரிக்க படைகளை இலக்கு வைத்து தற்கொலை தாக்குதல் இடம்பெற்றிருக்கும் பின்புலத்திலும்தான், நியூசிலாந்தில் அப்பாவி மக்கள்மீது குறித்த காத்தான்குடி ஐ. எஸ். ஐ. எஸ். ஆதரவாளர் தாக்குதலை நடத்தியிருக்கின்றார். தலிபான்களின் மீள் எழுச்சி, உலகெங்குமுள்ள நாடுகடந்த இஸ்லாமிய பயங்கரவாத வலையமைப்புக்களுக்கு புத்துணர்ச்சியளித்துள்ளதாக, சர்வதேச பயங்கரவாத நிபுணர்கள் கூறிவரும் பின்புலத்தில்தான் இந்த சம்பவத்தையும் நோக்க வேண்டியிருக்கின்றது.

இலங்கையின் முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் நீண்ட காலமாகவே, இஸ்லாமிய அடிப்படைவாத சிந்தனை கொண்டோர் வெளிப்படையாகவே இயங்கி வந்திருக்கின்றனர். இஸ்லாமிய மத அடிப்படைவாத ஸ்தாபனங்கள் தொர்ச்சியாக இயங்கி வந்திருக்கின்றன. குறிப்பாகக் காத்தான்குடியே இவ்வாறான அடிப்படைவாத சிந்தனைகளின் தொட்டிலாக இருந்திருக்கின்றது. அரசாங்கம் இவற்றின்மீது எந்தவொரு கண்காணிப்பையும் கொண்டிருக்கவில்லை. இதற்கு, மத்தியில் அதிகாரத்தில் இருக்கின்ற அரசாங்கங்களில் முஸ்லிம் அரசியல் கட்சிகளும் பிரதான பங்கு வகித்தமையும் பிரதான காரணமாகும்.

அதேவேளை இலங்கை அரசின் முழுக்கவனமும் எப்போதுமே வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்கள்மீதே இருந்தது. தமிழர்கள்தான் பிரச்னைக்குரியவர்கள் என்னும் பார்வையே அரசிடம் மேலோங்கியிருந்தது. விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னரும் அரசின் அணுகுமுறைகளில் பெரியளவில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கவில்லை. இவ்வாறானதொரு சூழலில்தான் ஈஸ்டர் தாக்குதல் அரசின் கண்களை திறக்க வைத்தது. அதுவரையில் முஸ்லிம்கள் விடயத்தில் ஆழ்ந்த மயக்கத்தில் இருந்த கொழும்பின் அதிகார மையம், முஸ்லிம்களின் நடவடிக்கைகளை கண்காணிக்கத் தொடங்கியது. ஒருவேளை ஈஸ்டர் தாக்குதல், நடக்காமல் இருந்திருந்தால், அரசு இப்போதும் வழமைபோலவே நித்திரை மயக்கத்தில், சுகமாக தமிழர்களை பற்றி மட்டுமே, கனவு கண்டுகொண்டிருக்கலாம்.

இலங்கையின் முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், முக்கியமாக, கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மத்தியில் அடிப்படைவாத சிந்தனை பள்ளிகள் நீண்ட காலமாகவே தொழிற்பட்டு வருகின்றன. இதற்கு முஸ்லிம் அரசியல்வாதிகளின் ஆதரவும் இருந்தது. ஆனால், முஸ்லிம்கள் தங்கள் மத்தியில் இருக்கின்ற இந்த அடிப்படைவாத போக்கை மூடிமறைப்பவர்களாகவே இருந்திருக்கின்றனர். ஈஸ்டர் தாக்குதலின் பின்னரும்கூட, யாரே ஒரு சிலரின் வேலை என்றவாறு மட்டுமே அதனை தட்டிக்கழிக்க முற்பட்டனர். தங்கள் சமூகத்திலுள்ள அடிப்படைவாத நாட்டத்தை விமர்சனத்திற்குள்ளாக்க முற்படவில்லை. முஸ்லிம்கள் மத்தியில் இருக்கின்ற படித்த சமூகத்தினரும் எப்போதும் தங்களின் தவறுகளை மூடிமறைப்பதிலேயே கவனம் செலுத்தி வருகின்றனர். நியூசிலாந்து தாக்குதல் இலங்கை முஸ்லிம்களுக்கு மீண்டும் ஓர் எச்சரிக்கையைக் கொடுத்திருக்கின்றது.

# பொலிஸ் கண்காணிப்புக்குள் நியூசிலாந்து தாக்குதல்தாரி வந்தது எப்படி?

**குமாரதாஸன்**



*நியூசிலாந்தில் சில ஆண்டுகளாகப் பொலிஸ் கண்காணிப்பின் கீழ் இருந்து வந்த இலங்கை இளைஞர் ஒருவர் அங்கு பொது மக்களைக் கத்தியால் வெட்டிக் காயப்படுத்திய வேளை சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.*

*ஒக்லாந்து நகரில்நவீன கடைத் தொகுதி ஒன்றில் அவரது கத்தி வெட்டுக்கு இலக்காகி ஆறு பேர் படுகாயமடைய நேரிட்டுள்ளது. 32 வயதான தாக்குதலாளியின் பெயர் விவரங்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளியிடப்படவில்லை. இப்போதைக்கு அவர் ‘எஸ்’ என்றே குறிப்பிடப்படுகிறார்.*

*2011 ஆம் ஆண்டில் இலங்கையில் இருந்து நியுசிலாந்துக்கு வந்துள்ளார். இஸ்லாமியப் பயங்கரவாதம் தொடர்புடைய இணையத் தளங்களைத் தேடிய காரணத்தால் உஷார் அடைந்த நியூசிலாந்துப் பொலிஸார் அவரைக் கண்காணிக்கத் தொடங்கினர். இரண்டு கத்திகளைக் கொள்வனவு செய்தமை மற்றும் பயங்கரவாதம் தொடர்பான சமூக ஊடகப் பதிவுகளை வெளியிட்டமைக்காக அவர் ஒரு முறை விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.*

*“நீங்கள் ஒரு கத்திக்காகக் கவலைப்படுகிறீர்கள், நானோ பத்துக் கத்திகளை வாங்குவேன்.. அது என் உரிமை” ஒரு தடவை நீதிமன்றம் ஒன்றில் நிறுத்தப்பட்ட போது அந்த இளைஞர் நீதிபதியிடம் இப்படிக் கூறினாராம். நியூசிலாந்தின் ‘ஹெரால்ட்’ (NZHerald) பத்திரிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.*

*இலங்கைக்குத் திரும்பிச் சென்று அங்கு தாக்குதல் நடத்துகின்ற திட்டமும் அவரிடம் இருந்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. “ஒரு நாள் நான் என் நாட்டுக்குத் திரும்பி அங்குள்ள நியூசிலாந்து சமூகத்தினருக்கும் நான் யார் என்பதைக் காட்டுவேன்” என்று அவர் தனது பதிவு ஒன்றில் குறிப்பிட்டிருந்தாராம். இரண்டு தடவைகள் சிரியாவுக்கும் ஒரு முறை சிங்கப்பூருக்கும் செல்ல முயற்சித்தவேளை அவர் விமானநிலையத்தில் தடுக்கப்பட்டார் என்ற தகவலைப் பாதுகாப்புத் தரப்பினர் வெளியிட்டுள்ளனர்.*

*மேற்கு நாட்டவர்களையும், இஸ்லாத்தை நம்பாதவர்களையும் கொல்வது எப்படி என்று இணையத்தில் தகவல்களைத் தேடியமை தெரியவந்த போதிலும் இதற்கு முன்னர் எந்தக் குற்றச் செயல்களிலும் ஈடுபடாத காரணத்தால் அந்த இளைஞனைச் சிறையில் அடைக்க முடியவில்லை. வேட்டைக் கத்திகளை வாங்கினார் என்ற காரணத்துக்காகவோ அல்லது இணையத்தில் பயங்கரவாதக் காட்சிகளைப் பகிர்வதற்காகவோ ஒருவரைக் கைது செய்து சிறையில் அடைப்பதற்கு நியூசிலாந்தில் சட்டங்கள் இல்லை.*


*பயங்கரவாதத் தாக்குதல் ஒன்றைத் திட்டமிடுபவரைப் ‘பயங்கரவாதி’ என்று கருதுவதற்கும் அங்குள்ள சட்டங்கள் அனுமதிப்பதில்லை. ஆபத்தானவர் அல்லது பயங்கரவாத எண்ணம் உள்ளவர் என்பது தெரிந்தும் தாக்குதல் ஒன்றை நடத்தும் வரை அவரைக் கண்காணிப்பில் வெளியே வைத்திருக்கின்ற சட்ட நடைமுறைகளே அங்குள்ளன. அவ்வாறு வெளியே இருந்த பயங்கரவாதி ஒருவரே அங்கு பொதுமக்களைக் கத்தியால் காயப்படுத்தியுள்ளார்.*

*பொதுப் பாதுகாப்புக்கு ஆபத்தானவர், இரண்டு வேட்டைக் கத்திகளைக் கொள்வனவு செய்தவர், ஐ. எஸ். பயங்கரவாத அமைப்பின் வீடியோக்கள் வைத்திருந்தவர் ஆகிய மூன்று காரணங்களுக்காகசில ஆண்டுகளாகத் தீவிர கண்காணிப்பின் கீழ் இருந்த அந்த இளைஞர் கடைசியில் தாக்குதல் ஒன்றை நடத்தியசமயத்தி லேயே சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.*

*நாட்டில் மிகவும் ஆபத்தான பேர்வழியாகக் கருதப்பட்டு - 24 மணிநேரமும் - பொலிஸ் கண்காணிப்பு வளையத்தினுள் இருந்தவர் எப்படியோ பொலிஸாரது கண்களில் மண்ணைத் தூவிவிட்டுக் கத்தியுடன் சென்று பொது மக்களைத் தாக்கிக் காயப்படுத்த முடிந்துள்ளது. பயங்கரவாதிகள் விடயத்தில் நியுசிலாந்தின் சட்டம் மற்றும் பாதுகாப்புக் கட்டமைப்புகளில் காணப்படுகின்ற பலவீனத்தையே இச்சம்பவம் வெளிப்படுத்துகிறது என்பதைச் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர்.*

*இலங்கையில் 2019 ஏப்ரலில் ஈஸ்டர் தினத்தன்று நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் ஐ. எஸ். அமைப்புக்கும் இலங்கையர்களுக்கும் உள்ள தொடர்புகள் வெளிச்சத்துக்கு வரத் தொடங்கின. ஐ. எஸ். இயக்கத்தினால் ஈர்க்கப்பட்ட இலங்கைப் பிரஜை ஒருவர் மேற்கு நாடு ஒன்றில் தாக்குதல் நடத்தியிருப்பது இதுவே முதல் சம்பவம் ஆகும். ஆயினும் தாக்குதலாளிக்கும் ஐ. எஸ். அமைப்புக்கும் நேரடியான தொடர்பு எதுவும் இருப்பது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. இஸ்லாமியப் பயங்கரவாதக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட தனியாள் ஒருவரது தாக்குதல் நடவடிக்கையே இது என்று நியூசிலாந்து கூறியுள்ளது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**செப்-05 ஞாயிற்றுக்கிழமை**
**பிலவ வருடம் - ஆவணி 20**
**நல்ல நேரம் : 7.30 - 9.00**
**ராகு காலம் : 4.30 - 6.00**
**திதி : சதுர்த்தசி**



## இன்றைய ராசிபலன்

**05.09.2021**

**மேடம்**
வேலைப்பளு அதிகரித்தாலும் சமாளித்து விடுவீர்கள். பல நாட்கள் சந்திக்காத நண்பர்கள் தொடர்பு கொள்வார்கள். குடும்பத்தில் ஏற்படும் சலசலப்பை புன்னகையுடன் சமாளிப்பீர்கள்.

**இடபம்**
பாதியில் நின்ற வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். குடும்பத்தில் ஏற்படும் பிரச்னைகளை புன்னகையுடன் சமாளிப்பீர்கள். பயம் தீரும். பெண்களால் நிம்மதி ஏற்படும்.

**மிதுனம்**
யாரும் தன்னைப் புரிந்து கொள்ளவில்லை என்ற ஆதங்கம் தீரும். உறவினர் உங்கள் ஆலோசனையை கேட்டுப் பயன் பெறுவர். எதிர்ப்புகள் நீங்கி உங்களின் எண்ணங்கள் நிறைவேறும்.

**கடகம்**
கவலை ஒன்று முடிவுக்கு வரும். குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும். பணியிடத்தில் உயரதிகாரி உங்களை ஆதரிப்பார் என்று எதிர்பார்க்க வேண்டாம். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
இனிமையான நாள். எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கும். சுபநிகழ்ச்சிக்கான முயற்சி வெற்றிப் பாதையை நோக்கிச் செல்லும். இழந்த பொருட்கள் கிடைக்கும். சகோதர ஒற்றுமை உண்டு.

**கன்னி**
புதிய முயற்சி எடுக்கும் நாள். வியாபாரத்தில் ஓரளவு இலாபம் உண்டு. உடன்பிறப்புகள் பற்றி ஏற்பட்ட கவலைகள் அனைத்தும் மாறும். வாழ்வில் திசை திருப்பம் ஏற்படும். சுபச்செய்தி ஒன்று வரும்.

**துலாம்**
நீண்டநாள் கனவு ஒன்று நனவாகும் நாள். சொத்துக்கள் வாங்குவது பற்றிய திட்டத்தில் தாமதம் ஏற்படலாம். கவனத்துடன் புதிய திட்டங்களை தீட்டி மகிழ்வீர்கள்.

**விருட்சிகம்**
பணியிட விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். நெருங்கிய நண்பருடன் எண்ணத்தைப் பகிர்ந்து கொள்வீர்கள். எடுத்த முயற்சி வெற்றி பெறும். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள்.

**தனுசு**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் குறையும். எதிர்பார்த்த விஷயம் ஒன்றிற்கு அதிகம் செலவாகலாம். மற்றவர்கள் விஷயத்தில் தலையிட வேண்டாம்.

**மகரம்**
யாரிடமும் முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள். பணத்தை கவனமாக கையாளுங்கள். மனதிடம் தேவை. பிள்ளைகளிடம் இருந்து மன நிறைவு அளிக்கும் செய்தி வரும்.

**கும்பம்**
தாழ்வு மனப்பான்மை வராமல் காத்துக் கொள்ளுங்கள். எதிலும் நிதானப்போக்கு இருக்கும். பதற்றம் வேண்டாம். குடும்பத்தில் ஒருவர் திருமணம் குறித்து முன்னேற்றம் இருக்கும்.

**மீனம்**
செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. மன நிறைவு ஏற்படும். சகபணியாளர்களின் அன்பு கிடைக்கும். குறுக்கு வழி காட்டும் நண்பர்களை விலக்குவது நல்லது.

# சைவம், சமூகம் என பன்முக பணிகளை செய்துவரும் இரத்தினம் இராமநாதன்

## 75 வது வயதில் தடம் பதிக்கின்றார்

**மு.க. மாசிலாமணி - லண்டன்**



உயர்ந்த கம்பீரமான தோற்றம், கனிவும் அன்பும் கலந்த இனிமையான பேச்சு, யாருடனும் முரண்படாத பேச்சு, எத்தகைய சூழ்நிலையிலும் பொருத்தமான ஆலோசனை வழங்கி சுமூகமாக வழிநடாத்திச் செல்லும் திறன், சைவம், தமிழ் தரணியெங்கும் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்ற தணியாத தாகம், அவதியுறும் மக்களின் அவலம் போக்க வேண்டுமென்று அயராது முயலும் தொண்டுள் ளம், அறிவு, ஆற்றல், ஆளுமை நிறைந்த தலைமைத்துவம். இத்தகைய உயரிய பண்புகளின் உறைவிடமாக விளங்குபவர் பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்க ஸ்தாபகர் இராமநாதன்.

தான் பிறந்த பன்னாலைக் கிராமத்திலுள்ள ஞான வைரவர் ஆலயத்தில் மூத்தோர் சிலர் உதவியுடன் தன் நண்பர்களையும் இணைத்து பஜனை மன்றத்தை ஆரம்பித்து கூட்டுப்பிரார்த்தனை, சொற்பொழிவுகள் என வாரம்தோறும் நிகழ முன்னின்று செயற்பட்டவர். சிவன் அடியார்களுக்குத் தொண்டு செய்த நாயன்மார்களின் திவ்விய வரலாறு கூறும் பக்திப் பெருநூலான பெரிய புராணம் பற்றி தொடர் சொற்பொழிவினை ஒருங்கமைத்து நிகழ்த்தியவர்.

இராமநாதனின் இந்தச்செயற்பாடு மிக இளவயதிலேயே சைவத்தமிழ்ப் பக்திப் பேரிலக்கியத்தில் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டையும், விழாக்களை ஒழுங்கமைத்து மிகச் சிறப்பாக நிகழ்த்திய அன்னாரின் ஆற்றலையும் வெளிக்காட்டுவனவாய் அமைந்தன. "தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்றவாறு இராமநாதனின் பிற்கால சமய, ஆன்மீக, சமூகத் தொண்டுகளை அவதானிக் கும்போது சிவத்தொண்டின் சிறப்பை விளக்கும் பெரியபுராணம் அவரின் சிந்தனைப் போக்கில் செல்வாக்குச் செலுத்தி இருக்கவேண்டும்.

பெரியபுராணம் விவரிக்கும் உயரிய சிந்தனைகளை மக்கள் மனங்களில் ஆழப் பதிக்க வேண்டும் என்ற நோக்கில் பேச் சும், மூச்சும் பெரியபுராணம் என்றே சிந்திக்கும் அவர், பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தில் மீண்டும் சில ஆண்டு களுக்கு ஒரு முறை பெரிய புரா ணத் தொடர் சொற்பொழிவு நிகழ்வினை நடாத்தியதுடன் பெரியபுராணம் பேசும் அடி யார்களின் உயர்ந்த தொண்டு நெறியினையே தனது வாழ்க் கையின் இலட்சியமாகக் கொண்டு பெரிய தொடர் சொற் பொழிவுகளை ஏற்பாடு செய்தவர்.

கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தில் மாணவ பருவத்தில் தீவிர ஈடுபாடு காட்டிய இவர் உயர் கல்விக்காக இங்கிலாந்து சென்ற போது கொழும்பு சைவ முன்னேற்றச் சங்க கிளையை இங்கிலாந்தில் "சைவ சமயக் கருத்துணர்வின் ஊடகச் சமூக சேவை" என்ற தாரக மந்திரத்தை மையக்கருத்தாகக் கொண்ட பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தை 1977 இல் தனது நண்பர்களுடன் இணைந்து ஆரம்பித்தார். தொடர்ந்து நாற் பத்தி நான்கு ஆண்டுகள் பணி யாற்றிவரும் இச்சங்கம் ஒரு பலம் மிக்க நிறுவனமாக இங்கிலாந்து "சைவ முன்னேற்றச் சங்கம்" என்ற பெயரில் சிறப்புடன் தொண்டாற்றி வருகின்றது.

சமய ஆன்மீக சமூக தொண்டாற்றும் சபைகள், திருக்கோவில்கள் போன்ற நிறுவனங்களின் நிர்வாகத்தில் இளம் வயதினரையும் இணைத்துக் கொள்ளும் நடைமுறை மிக மிக அரிதாகவும் வயதானவர்களே நிர்வாகப் பதவிகளைக் கைப்பற்ற முயலும் இக்காலத்தில் பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம் 40 இளைஞர்களை தெரிவு செய்து அவர்களை சங்க உறுப்பினர்களாக்கி 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் விழா மேடையில் அவர்களை வரவழைத்து இவ்விளைஞர்கள்தான் வருங்காலத்தில் சங்கத்தை வழிநடத்தும் நிர்வாகிகளெனச் சபைக்கு அறிமுகம் செய்தமை குறிப்பிட்டுக் கூறக்கூடிய முன்னுதாரனமான நடடிவக்கையாகும்.

வயது வந்தும் வறுமை காரணமாக திருமணம் நிகழாதிருந்த 40 இளைஞர்களையும், யுவதிகளையும் தெரிவு செய்து மாங்கல்யம், கூறை, வேட்டி சால்வை என திருமணத்திற்கு தேவையான பொருட்களை எல்லாம் பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்க அனுசரணையில் கொழும்பு பம்பலப்பிட்டி சம்மாங்கோட்டுப் பிள்ளையார் கோவிலில் 40 தம்பதிகளின் திருமணத்தை நிறைவேற்றிய புனித கைங்கரியம் வியந்து போற் றத்தக்க மிகச் சிறப்பானதொரு சமூகப்பணியாகும்.

மாணவ பருவத்திலிருந்தே பெரியபுரானம் விவரிக்கும் தொண்டு நெறியினை வாழ்க்கையின் இலட்சியமாக சைவம், தமிழ், சமூகம் எனப் பன்முகப் பணிகளைச் செய்து வரும் இரத்தினம் இராமநாதன் தனது 75 ஆவது வயதில் தடம் பதிக்கின்றார். அவரின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் உந்துசக்தியாக விளங்கி ஆக்கமும், ஊக்கமும் நல்கும் அவரது வாழ்க்கைத் துணை, பிள்ளைகள், குடும்பத்தினர் எல்லோரும் சீரோடும், சிறப்போடும் முத்து விழா, வைர விழா என எல்லா விழாக்களும் பொலிந்து, திகழ்ந்து நீடூழி காலம் வாழ வாழ்த்துவோம்.



## 'இந்துமுகம்' சஞ்சிகையின் பிரதி டான் குழும தலைவரிடம் கையளிப்பு!

யாழ்ப்பாணம், செப். 05
நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் இந்துமுகம் சஞ்சிகை நேற்று வெளியிடப்பட்டது.

நல்லூர் சப்பைரதத் திருவிழாதினத்தில் வெளியான இந்த சஞ்சிகையின் பிரதிகளில் ஒன்று டான் ஊடக குழுமத்தின் தலைவர் எஸ். எஸ். குகநாதனிடம் கையளிக்கப்பட்டது. இந்த சஞ்சிகையின் பிரதியை அதன் பிரதம ஆசிரியர் பால முகுந்தன் கையளித்தார்.

டான் தொலைக்காட்சியின் யாழ். பிரதான அலுவலகத்தில் இடம்பெற்ற நூல் கையளிக்கும் நிகழ்வில் மதுரகவி காரை எம். பி. அருளானந்தம், டான் குழுமத்தின் நிர்வாக இயக்குநர், செயல்பாட்டு முகாமையாளர், செய்தி ஆசிரியர் மற்றும் டான் தொலைக்காட்சி பணியாளர்கள் சுகாதார விதிமுறைகளை பின்பற்றி கலந்து கொண்டனர்.

# மாதம் ஒன்றில் 10,000 பேர் உயிரிழக்கும் அபாயநிலை!

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை*



கொழும்பு, செப். 05
**நாட்டில் தற்போது காணப்படும் கொரோனா அச்சுறுத்தல் நிலைமை தொடர்ந்து நீடித்தால் எதிர்வரும் நாட்களில் நாள் ஒன்றுக்கு 10 ஆயிரம் பேர் தொற்றாளர்களாக இனங்காணப்படும் அபாயம் உள்ளது. அத்துடன், மாதமொன்றுக்கு 10 ஆயிரம் பேர் உயிரிழக்கும் அவலநிலை ஏற்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்தியக் குழு உறுப்பினரும் ஊடகக்குழு உறுப்பினருமான மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் எச்சரித்துள்ளார்.**

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

நாட்டில் தற்போது பதிவாகும் கொரோனா மரண வீதமானது இந்தியாவைவிட ஐந்து வீதத்தால் அதிகரித்துள்ளது. பெயரளவில் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்த தனிமைப்படுத்தல் ஊரடங்கில் 90 சதவீதமான மக்கள் வீட்டுக்குள்ளே முடங்கி இருந்தால் மாத்திரமே கொரோனா தொற்றை கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடு தற்போது எச்சரிக்கை நிலை நான்கில் உள்ளது. இது சிவப்பு எச்சரிக்கையையும் சமூக பரவலையும் குறிக்கின்றது. மேலும் தென்னாபிரிக்காவில் பரவும் சி 1. 2 எனப்படும் புதிய கொரோனா திரிபும் இலங்கையில் பரவும் அபாயம் உள்ளது என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார். (ஐ)

*யாழ்ப்பாண மாவட்டத்தில்*

# கொரோனா மரணம் உயர்வு 30 சடலங்கள் தேங்கும்நிலை!

யாழ்ப்பாணம், செப். 05
யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றால் பெரு மளவானோர் உயிரிழந்துவருகின்றனர். இந்த நிலையில், 30 சடலங்களுக்கும் அதிகமானவை தேங்கும் சாத்தியப்பாடு உள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், மத்திய சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு அறிக்கை யிட்டுள்ளது.

கடந்த 2ஆம் திகதி உயிரிழந்தவர்களின் சடலங்களை எதிர்வரும் 09ஆம் திகதியே தகனம் செய்யமுடியும் என்று நேற்று தெரிவிக்கப்பட்டது. நாளாந்தம் ஐந்து சடலங்கள் என்ற அடிப்படையில் சடலங்கள் எரியூட்டப்படுவதாலேயே இந்த சிக்கல் நிலவுவதாக தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றால் நாள்தோறும் ஐந்துக்கும் அதிகமான மரணங்கள் இடம்பெற்றுள்ளன. இதன் அடிப்படையில் 30இற்கும் அதிகமானோரின் சடலங்கள் தேங்கியிருக்கக் கூடிய சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன.

இதுகுறித்து மத்திய சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு அறிக்கை ஊடாக சுட்டிக்காட்டியுள்ள வடக்கு சுகாதாரத் திணைக்களம், சடலங்களை தொடர்ந்தும் பராமரிப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றன என்றும் மாற்று நடவடிக்கைகள் அவசியம் தேவை எனவும் வலியுறுத்தியுள்ளது. (ஐ)

## ஊரடங்கு சட்டத்தை மீறியோர்மீது கோப்பாய் பொலிஸார் நடவடிக்கை!



யாழ்ப்பாணம், செப். 05
ஊரடங்கு சட்டத்தை மீறி கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் பயணித்தோர், வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நேற்றைய தினம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் பொலிஸார் விசேட சுற்றுக்காவல் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, தடையை மீறி வீதியில் பயணித்தவர்களை தடுத்து அவர்களை விசாரணைக்கு உட்படுத்தினர். அத்தியாவசிய காரணங்களை தவிர தேவையற்று நடமாடியோருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்தனர்.

இதேபோன்று, வீதிகளில் சுகாதார நடவடிக்கைகளை பின்பற்றாது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களை கடுமையாக எச்சரித்த பொலிஸார், அவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

## கிளிநொச்சிக்கு 39.5 தொன் சீனி!

கிளிநொச்சி, செப். 05
கிளிநொச்சி மாவட்டத்துக்கு 39.5 தொன் சீனி கிடைத்துள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை ஊடகங்களுக்கு தகவல் அளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த சீனியை அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு அமைய சதொச, கூட்டுறவு சங்கங்கள் ஊடாக நியாய விலையில் விநியோகிக்கப்படு கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.(ஐ)

## காரைநகரில் விதிமீறல் திருமணம்; பங்கேற்ற பலர் தனிமைப்படுத்தல்!

யாழ்ப்பாணம்,செப். 05
காரைநகர் பிரதேசத்தில் திருமண நிகழ்வு ஒன்றில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர் என்று தகவல்கள் வெளியாகின. இதையடுத்து திருமணத்தில் பங்கேற்ற பலர் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

காரைநகர் அல்வின் வீதியில் கடந்த புதன்கிழமை திருமண நிகழ்வு ஒன்று சுகாதார விதிகளை மீறி - அதிகளவானோரின் பங்கேற்புடன் சமூக வலைத்தளத்தில் பகிரப்பட்டன.

இந்த ஒளிப்படங்களில் எவரும் முகக்கவங்களை அணியவோ அல்லது சமூக இடைவெளியை பின்பற்றவோ இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சுகாதாரத் துறை யினர் துரிதமாக செயல்பட்டு சட்டத்தை மீறி இந்த நிகழ்வில் பங்கேற்ற அனைவரையும் கட்டாய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தினர்.

இதேவேளை, நாட்டில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப் படுத்தும் அளவிற்கு நிலைமை மிகமோசமாகக் காணப்படும்சூழலில் இவ்வாறு நடந்துகொள்வது மிகுந்த வேதனையை தோற்றுவித்துள்ளதாக சுகாதார தரப்பினர் தெரிவித்தனர். (ஐ)






# ஊர்காவற்றுறை மருத்துவமனைக்கு வெண்டிலேட்டர் கருவி அன்பளிப்பு!

ஊர்காவற்றுறை, செப். 05
ஊர்காவற்துறை ஆதார மருத்துவமனைக்கு வெண்டிலேட்டர் கருவி உட்பட சுமார் 81 இலட்சம் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் சுருவில் சவரிமுத்து பௌண்டேசனால் வழங்கப்பட்டது.

இந்த உபகரணங்கள் நேற்றுமுன்தினம் ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையின் அத்தியட்சகர் மருத்துவர் யோ. யதுநந்தனிடம் அன்பளிப்பு செய்யப்பட்டன.

ஊர்காவற்றுறை - சுருவிலை சேர்ந்த சவரிமுத்து ஞாபகர்த்தமாக அவரின் குடும்பத்தினர் தமது சொந்த நிதியில் இந்த மருத்துவ கருவிகளை அன்பளிப்பு செய்தனர்.

இந்த நிகழ்வில் இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி ஜெயக்குமார் அடிகளார் உத்தியோகபூர்வமாக கலந்து கொண்டு சவரிமுத்து பௌண்டேசன் சார்பில் இந்த உதவிகளை கையளித்துள்ளார். (ஐ)

# ஆயிரம் மருத்துவ மாணவர்களை பயிற்சிக்கு சேர்ப்பதில் தடைகள்!

கொழும்பு, செப். 05

**நாட்டில் தற்போதுள்ள கோவிட்-19 நோய்த்தொற்று பரவலைக் கருத்தில் கொண்டு, சுகாதார முறையை வலுப்படுத்த மருத்துவக் கல்வியை முடித்த மாணவர்களை விரைவாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான கோரிக்கைகளை செயல்படுத்துவதில் தடைகள் உள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் இறுதியாண்டு தேர்வு இன்னும் நடைபெறாத காரணத்தால் இத்தகைய வேலைவாய்ப்பு நியமனங்களை வழங்க முடியாது என்று சுகாதார அமைச்சின் மூத்த அதிகாரியை மேற்கோள்காட்டி சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

மருத்துவ கல்வியை நிறைவு செய்த மாணவர்களை உள்ளகப் பயிற்சிமூலம் ஆட்சேர்ப்பு செய்தால், அது சுகாதார சேவையை வலுப்படுத்தும் என்று அரச மருத்துவ அதிகாரி கள் சங்கம் கேட்டுள்ளது. இதன்மூலம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயிற்சியாளர்களை நியமிக்க முடியும் என்று சங்கத்தின் ஊடக பேச்சாளர், மருத்துவர் சமந்த ஆனந்த குறிப்பிட்டார்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் இறுதியாண்டு பரீட்சை இன்னும் நடை பெறாத காரணத்தால் இத்தகைய வேலைவாய்ப்பு நியமனங்களை வழங்க முடியாது என்று சுகாதார அமைச் சின் மூத்த அதிகாரி தெரிவித்தார்.

அனைத்து மாணவர்களும் ஒரே நேரத்தில் உள்ளகப் பயிற்சி நியமன பட்டியலில் சேர்க்கப் படுவார்கள் என்பதால், பரீட்சையை நடத்தி பெறுபேறு களைப் பெற்ற பின்னர் அதைச் செய்ய முடியும் என்று கூறப் பட்டது. பரீட்சை நடத்தப் பட்டு பெறுபேறுகள் வெளியிடுவது ஒக்ரோபர் வரை ஒத்தி வைக்கப்படும் என்று தெரிவிக் கப்பட்டது.

மாணவர்களுக்கு தனிப்பட்டியலில் இருந்து வேலை வாய்ப்பு நியமனங்கள் வழங்கப் பட்டாலும், எதிர்காலத்திலும் பிரச்சினை கள் எழும் என்று சுகாதார அமைச்சின் மூத்த அதிகாரி குறிப்பிட்டார். எவ்வாறாயினும், ஏற்கனவே செய்யப் பட்ட வேலைவாய்ப்பு நியமனங்களை வழங்குவதற்கும் பின்னர் மற்றவர்களை நியமிப் பதற்கும் வாய்ப்பு உள்ளது என்று தெரியவந்தது. இரண்டாவது தொகுதிக்கு பாதகமாக இருக்கக்கூடாது என்பதற்காக முதல் தொகுதி யின் உள்ளகப் பயிற்சிக் காலத்தை மேலும் 6 மாதங்கள் நீடிக்க முடியும். இந்த குழு தற்போது வேலை வாய்ப்பு நியமனங்களைப் பெறும் மற்றும் பிற நோக்கங் களுக்காக மருத்துவமனை களில் பணிபுரியும் மருத்துவர் களை நியமிப்பதற் காக வேலை வாய்ப்பு நியமனங்களில் வேலைக்கு வர வேண்டும்.

தற்போது உள்ளகப் பயிற்சி நியமனத்திற்காக காத்திருக்கும் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர் களின் துரிதமான நியமனம் மருத்துவர்கள் உட்பட சுகாதா ரத் துறையில் தற்போதுள்ள சில நெருக்கடிகளைத் தணிக் கும். இது நோயாளிகளின் உயிரையும் காப்பாற்றும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சட்டவிரோத மீன்பிடி; 95 பேர் கைதாகினர்!

கொழும்பு, செப். 05

நாட்டில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 95 பேரை தாம் கைது செய்துள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

வடக்கு, கிழக்கு, வட மத்திய, தென்கிழக்கு, வட மேற்கு கடற்படை கட்டளை பீடங்களின் உத்தரவின் பெயரில் நடத்தப்பட்ட நடவடிக் கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர். அத்துடன், 29 படகுகளையும், சட்ட விரோத மீன்பிடி உபகரணங் களையும் கைப்பற்றியுள்ளதாக வும் கடற்படை தெரிவித்தது.

மேலும் கடந்த திங்கட் கிழமை முதல் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கை யிலேயே இவர்கள் கைது செய் யப்பட்டனர் என்றும் கடற் படை தெரிவித்தது.

பிடிபட்டவர்கள், கிளிநொச்சி, ஜெயபுரம், மன்னார், தாழ்வுபாடு, திருகோணமலை, வெருகல், குச்சவெளி, கல்முனை, மட்டக்களப்பு, வாகரை பகுதிகளை சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் அந்தந்த பகுதிகளை சேர்ந்த நீரியல் வளத் திணைக்களத்தினரிடம் சட்ட நடவடிக்கைக்காக ஒப் படைக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தொற்றால் மருத்துவர் உயிரிழப்பு

கொழும்பு, செப். 05

ஆனமடுவை பிரதேச மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் வசந்த ஜயசூரிய கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தாரென சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீர்கொழும்பு பொது மருத் துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் சில காலம் பணியாற்றி வந்த அவர், பின்னர் ஆனமடுவை சுகாதார மருத்துவ அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

சுமார் 10 நாட்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட



அவர் அங்கொட கொரோனா சிகிச்சை பிரிவில் உயிரிழந்தார். கடவத்தையில் வசித்து வந்த ஜெயசூர்ய, இரண்டு குழந்தைகளின் தந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 25 சிறுவர்கள் தொற்றால் மரணம் 180பேருக்கு கொரோனா பாதிப்பு!

கொழும்பு, செப். 05

கொரோனா தொற்றால் நேற்றுவரை 180சிறுவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ள னர். ஒட்டுமொத்தமாக 25 சிறுவர்கள் இறந்த, அதேசமயம் இரு சிறுவர்கள் ஆபத்தான நிலையில் உள்ளன என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

105 சிறுவர்கள் லேடி ரிட்ஜ்வேமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 18 இறப்புகள் பதிவாகியுள்ளன.

சிறிமாவோ பண்டார நாயக்கா சிறப்பு சிறுவர் மருத் துவமனையில் 35 சிறுவர்கள்



சேர்க்கப்பட்டுள்ளனர். இங்கு இரு இறப்புகள் பதிவாகின. ஒரு குழந்தை ஆபத்தான நிலையில் உள்ளது.

கராப்பிட்டி போதனா மருத் துவமனையில் 7 சிறுவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒரு மரணம் பதிவாகியுள்ளது. ஆபத்தான நிலையில் எந்த சிறுவர்களும் இல்லை.

அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் மூன்று குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ள னர். ஒருவர் உயிரிழந்த நிலையில் மற்றொருவர் ஆபத்தான நிலையில் உள் ளார். ராகமை போதனா மருத்துவ மனையில் 30 சிறுவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர், இருவர் உயிருக்கு போராடி வருகின்ற னர் என்றும் தெரிவித்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இது உத்தியோகபூர்வமாக திரட்டப்பட்ட தகவல் இல்லை என்றும் தெரிவித்துள்ளது. (ஐ)

# 90 இலட்சம் பொதுமக்கள் தடுப்பூசிகளை பெற்றனர்!

கொழும்பு, செப். 05

90 இலட்சம் பொதுமக்கள் தடுப்பூசியின் இரு டோஸ்களை பெற்றுள்ளனர் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல தெரிவித்துள்ளார்.

சுகாதார அதிகாரிகளின் தகவலின்படி தடுப்பூசி போடும் பணி விரைவாக முன்னெடுக் கப்படுவதாக அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப் பிட்டுள்ளார்.

20 - 30 வயதுக்கு உட்பட்டோ ருக்கான தடுப்பூசிகள் அடுத்த வாரம் முதல் மேல் மாகாணத்தி லும் காலி மாவட் டத்திலும் ஆரம்பமாகும் என்று கூறிய அவர். ஏற்கனவே இது மாவட்ட அளவில் தொடங்கியுள்ளது என்றும் பதிவிட்டுள்ளார். (ஐ)

# 2500ஐ கடந்தது ஓட்டமாவடியில் அடக்கம் செய்யப்பட்ட சடலங்கள்!

மட்டக்களப்பு, செப். 05

கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்த 2 ஆயிரத்து 500 பேரின் சடலங்கள் ஓட்ட மாவடியில் அடக்கம் செய்யப் பட்டுள்ளன.

கொரோனா தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்கள் மட்டக்களப்பு - ஓட்டமாவடி - சூடுபத்தினசேனையில் அடக் கம் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த வகையில், நேற்று முன் தினம் அங்கு 24 இஸ்லாமியர் கள், 6 இந்துக்கள், ஒரு பௌத் தர் என 31 பேரின் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டன.

இதனால், அங்கு அடக்கம் செய்யப்பட்ட சடலங்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயி ரத்து 522ஆக அதிகரித்துள் ளது. (ஐ)

# நெருக்கடியை எதிர்கொள்ளும்நிலையில் மக்களின் சுதந்திரத்தை பறிக்கிறது அரசு!

## சமூகநீதிக்கான தேசிய இயக்கம்

கொழும்பு, செப். 05

நாட்டுமக்கள் நெருக்கடி களை எதிர்கொள்ளும் வேளை யில் அரசாங்கம் அவர்களின் சுதந்திரத்தைப் பறித்துக்கொள் கின்றது.

செயல்திறனான உணவுப் பொருள் விநியோகத்தில் அர சாங்கம் தோல்வி கண்டதை அடுத்து நாட்டில் அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கின்றது.

இவ்வாறு சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜெயசூரிய சுட்டிக்காட்டி யுள்ளார்.

அத்துடன், சீனி வரி அற வீட்டு மோசடி தொடர்பான விசாரணைகள் கடந்த மார்ச் மாதம் கணக்காய்வாளர் நாயகத்தால் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், அந்த விசாரணை அறிக்கை இன்னமும் ஏன் பாராளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்படவில்லை? அந்த அறிக்கை காணாமல் போய் விட்டதா? அல்லது மறைக் கப்பட்டுவிட்டதா? என்று கேள்வி எழுப்பினார்.

நாட்டுமக்கள் பெரும் நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் அவர்களின் சுதந் திரத்தை மேலும் பறித்துக் கொள்கின்றது. தற்போது அத்தியாவசிய உணவுப் பொருட்களை செயல்திறனான வகையில் பகிர்ந்தளிப்பதில் தோல்வியடையும் வேளையில், அரசாங்கம் அவசரகாலச்சட் டத்தை நடைமுறைப்படுத்து கின்றது.

இதேவேளை, "சில மாதங் களுக்கு முன்னர் ஒரு கிலோ கிராம் சீனியின் சந்தைவிலை 85 ரூபாயாகக் காணப்பட்டதுடன் இந்த வருடத்திற்குப் போதுமா னளவு சீனி கையிருப்பில் உள்ள தாகவும் உறுதிப்படுத்தப்பட்டி ருந்தது. ஆனால், வியாழக் கிழமை சீனியின் சந்தைவிலை 40 ரூபாயால் அதிகரித்திருக் கின்றது என்றும் அவர் கூறி னார். (ஐ)




# மொத்த தடுப்பூசி தேவையையும் சொந்த உற்பத்தியில் நிறைவுசெய்த இந்தியா!

“ஒகஸ்ட் 31ஆம் திகதிக்குள் 60 கோடி தடுப்பூசிகள் போடுவது என்பது, ஒரு வளரும் நாட்டைப் பொறுத்தவரை பேராசையான இலக்கு என்று மேலைநாட்டு ஊடகங்கள் தெரிவித்தன. ஆனால், நாம் ஒரு நாளுக்கு முன்னதாகவே அந்த இலக்கை எட்டிவிட்டோம்” என்று பத்திரிகையாளர் ராகுல் ரவிஷங்கர் ஒரு ‘ட்வீட்’ பதிவிட்டுள்ளார். இது ஒவ்வோர் இந்தியருக்கும் பெருமை தரக்கூடியது. மோடி மற்றும் பாஜகவுக்கு எதிரான மனநிலை கொண்டவர்கள் தவிர, மற்றவர்கள் எல்லோரும் பிரதமருக்குப் பெரிய நன்றியையும் செலுத்தவேண்டும். கோவிட்-19க்கு எதிரான போரில் தலைமைவகித்து, கடுமையான இலக்குகளை நிர்ணயித்து, வல்லுநர்களின் உதவியைக் கோரி முடிவுகள் எடுத்து, வைரஸால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையிலும் தடுப்பூசித் திட்டத்துக்கான நிதியை ஒதுக்கியவர் அவர்தான். இந்த ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதிக்குள் இந்தியாவின் மொத்த மக்கள் தொகையான 940 மில்லியன் மக்களுக்கும் தடுப்பூசி செலுத்தப்படும் என்று உச்சநீதிமன்றத்திடம் அரசு தெரிவித்துள்ளது.

ஆனால் சில மாதங்களுக்கு முன்னால் இரண்டாம் அலை கட்டுக்கடங்காமல் எல்லோரையும் திணறடித்துக்கொண்டிருந்தபோதும், தொற்று பாதித்தவர்களின் எண்ணிக்கை கற்பனைக்கெட்டாத வேகத்தில் உயர்ந்துகொண்டிருந்தபோதும் இந்த பாஜக அரசு இரண்டாம் அலையை சரியாகக் கையாளவில்லை என்றும், ஒக்ரோபர் மாதம் வரவிருக்கிற மூன்றாம் அலைக்கு அவர்கள் தயாராகவில்லை என்றும் எதிர்க்கட்சிகள் உட்பட, எல்லா தரப்புகளிலிருந்தும் விமர்சனங்கள் எழுந்தன. வளர்ச்சியடையாத நாடுகளுக்கு மோடி இலவசமாகத் தடுப்பூசிகளை வழங்கியதாலும் ஒப்பந்த அடிப்படையில் முன்பே முடிவு செய்யப்பட்ட எண்ணிக்கையில் பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளுக்கு தடுப்பூசிகள் ஏற்றுமதி செய்யப்பட்டதாலும் உள்நாட்டில் தடுப்பூசித் தட்டுப்பாடு ஏற்பட்டது என்று பலர்

500 மில்லியன் மக்களுக்கு ஒரு தவணை தடுப்பூசியாவது குறைந்தபட்சம் தரப்பட்டிருக்கிறது என்று அரசு அறிவித்திருக்கிறது.

ஆனாலும் 18 வயதுக்கு மேற்பட்ட எல்லோருக்கும் தடுப்பூசி போடும் இலக்கு எட்டப்படுவதற்கு இன்னும் நாம் நெடுந்தூரம் பயணிக்கவேண்டும். இன்னும் இந்த ஆண்டில் 120 சொச்ச நாட்களே பாக்கியிருக்கும் நிலையில், 1.23 பில்லியன் தடுப்பூசிகள் தந்து முடிக்கவேண்டுமானால், ஒரு நாளைக்கான சராசரி 10.1 மில்லியனாக உயர்த்தப்படவேண்டும்.

கோவிட்டுக்கு எதிரான இந்தியாவின் போரில் தடுப்பூசிகள் எப்படி உதவுகின்றன என்று நான் விரிவாக இங்கே எழுதியிருக்கிறேன். ஏனென்றால், இலங்கையின் தற்போதைய நிலவரம் அப்படிப்பட்டது. வட இலங்கையைச் சேர்ந்த என் நண்பர்கள், தொற்று அதிகரித்துவருவதாகவும் நெருங்கியவர்களின் சமீபத்திய இழப்புகளையும் என்னுடன் வலியோடு பகிர்ந்துகொள்கிறார்கள். தடுப்பூசித் தட்டுப்பாடு பற்றியும் விநியோகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வு பற்றியும் அவர்கள் கசப்புடன் பேசுகிறார்கள்.

கஷ்டங்களும் பேரிடர்களும் நமக்குப் பாடம் கற்றுத்தரவேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் அவற்றிலிருந்து தப்பிக்கவோ, குறைந்தபட்சம் நம் துன்பங்களைக் குறைத்துக்கொள்ளவோ முடியும். இதுவும் கடந்து போகும் என்று நினைத்துக்கொண்டு, சும்மா இருக்கக் கூடாது. அதற்கு மாறாக, சரியாக சிந்தித்து, வலுவான முயற்சிகளின் வழியாக, எதிர்காலங்களில் வாழ்க்கை சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் இருக்க முயலவேண்டும். இவர் யார் எனக்கு போதனை செய்வதற்கு என்று நினைக்கவேண்டாம், இனிய ஈழநாட்டு நண்பரே. 71 வயது அனுபவசாலி ஏதோ புலம்புகிறார். இதனோடு இன்னொன்றையும் உங்களிடம் பகிர்ந்துகொள்வதற்கு அனுமதி தாருங்கள். தனது மொத்த தடுப்பூசித் தேவையையும் சொந்த உற்பத்தியின் மூலமாகவே இந்தியா பெற்றிருக்கிறது. இப்போதுதான்


## ஈழத் தமிழர்கள் சாதிக்க வல்லவர்கள்

விமர்சித்தனர். இப்போது, அடுத்த வருடம்வரை தடுப்பூசி ஏற்றுமதியை நிறுத்திக் கொள்வதாக இந்தியா முடிவெடுத்துள்ளது. அந்த காலகட்டத்துக்குள் வைரஸ் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவின் கோவிட் மேலாண்மையாளர்களுக்கு சென்ற மாதம் நடந்த பரந்துபட்ட தடுப்பூசித் திட்டம் ஒரு பெரிய திருப்தியைத் தந்திருக்கிறது. ஒகஸ்ட் 31ஆம் திகதி அன்று ஒரு நாளில் அதிகபட்ச தடுப்பூசிகள் தருவதற்கான சாதனையும் நடந்தது. அன்றைக்கு மட்டுமே 1.28 கோடி தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. ஒகஸ்டில் மொத்தம் 183.5 மில்லியன் தடுப்பூசிகள் நாடு முழுவதும் போடப்பட்டிருக்கின்றன. அதாவது, ஒரு நாளைக்கு சராசரியாக 4.3 மில்லியன் என்று, ஜூலை மாதம் இருந்த கணக்கீடு மளமளவென உயர்ந்து, 5.9 மில்லியன் தடுப்பூசிகளாகியிருக்கிறது.

ஸ்புட்னிக்-5 தடுப்பூசி இந்தியாவுக்கு வந்துகொண்டிருக்கிறது. புனேயில் உள்ள சீரம் இன்ஸ்டிட்யூட் ஒப் இந்தியாவுக்கு ஒக்ஸ்போர்ட் ஆஸ்ட்ரா செனக்கா தடுப்பூசிகள் தயாரிக்க உரிமம் வழங்கப்பட்டுள்ளது. ஹைதராபாத்தில் உள்ள பாரத் பயோடெக் நிறுவனம், தன் உலகத்தரம் வாய்ந்த ஆய்வகத்தில் கோவாக்சினை உருவாக்கியுள்ளது.

இந்தப் பத்திகளில் மட்டுமல்ல, பல தளங்களிலும் இந்தியாவின் நிபுணர்கள், நண்பர்கள் குழுவிடம் இதை சொல்லியிருக்கிறேன் - எனது ஈழ நண்பர்கள் மிகவும் புத்திசாலிகள், திறமைசாலிகள், அவர்கள் நினைத்தால் எதையும் சாதித்துக் காட்டுவார்கள். அதை உலகின் பல மூலை முடுக்குகளிலும் நிரூபித்திருக்கிறார்கள். ஆனால், சொந்த ஈழ மண்ணில் பெரிய பெரிய தொழிற்சாலைகளை நிறுவி அவர்கள் வேலை வாய்ப்பு தரவேண்டும். மருத்துவமனைகள் கட்டி நோயுற்றவர்களை குணப்படுத்த வேண்டும், உயிர்காக்கும் மருந்துகளை உருவாக்கும் ஆய்வகங்களைக் கட்ட வேண்டும். ஆனால், இவையெல்லாம் நடக்காததற்கு இரண்டு, இல்லையில்லை மூன்று காரணங்கள் உண்டு என்று நம் எல்லாருக்குமே தெரியும்.



- பகவான் சிங் -
தமிழகத்தின் சிரேஷ்ட பத்திரிகையாளர்

முதலாவதாக, இனப்பாகுபாடு காரணமாக மூன்று தசாப்தங்கள் தொடர்ந்து நடந்த கொடூரமான போர், ஆயிரக்கணக்கான தமிழ் உயிர்களைக் குடித்திருக்கிறது. இலங்கைக்குள்ளேயும் வேற்று நாடுகளுக்கும் அகதிகளாகப் பல்லாயிரக்கணக்கானோரை இடம் பெயர்த்திருக்கிறது. இரண்டாவதாக, போருக்குப் பின்னால் அதிவேகத்தில் நடந்திருக்கவேண்டிய மீள் கட்டமைப்பு இன்னும் நடக்கவில்லை. நம் நிலங்களைத் திரும்பப் பெறவும், கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் சம உரிமைகள் வேண்டியும் பொருளாதார மேம்பாட்டுக்காகவும் சமூக அரசியல் சம உரிமைகளுக்காகவும் நாம் இன்னும் அரசுடன் போராடிக் கொண்டிருக்கிறோம். உண்மையில் நாம் தொழிற்சாலைகள் அமைக்கவும் ஆய்வகங்கள் அமைத்து இந்த நாடு தற்சார்பு அடையவும் நாம் போராடிக்கொண்டிருக்கவேண்டிய நேரம் இது.

புலம் பெயர்ந்த தமிழர்களின் மனப்பான்மையும் அவர்கள் வேறு விஷயங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் தருவதும் மூன்றாவது காரணம். போர்க் காலத்தில் நடந்த மனித உரிமை அத்துமீறல்களுக்கு எதிராகப் போராடி ஐ. நா. சபையின் விசாரணைக்கு வழிவகுப்பதோடு, சொந்த மண்ணில் பள்ளி, கல்லூரிகள், பல்தொழில்நுட்ப நிறுவனங்கள், பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகள், தொழில் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் அமைக்க அவர்கள் தங்களது வளங்களைப் பயன்படுத்தியிருக்கவேண்டும். சில வெளிநாட்டுத் தமிழர்கள் தங்கள் ஈழ சொந்தங்களுக்கு உதவுகிறார்கள் என்றாலும், ஈழப்போருக்காக அவர்கள் தந்த வளங்களோடு ஒப்பிடும்போது அது சொற்பம்தானே! அது, புலிகளின் துப்பாக்கி முனையில் பெறப்பட்டது என்பதும் கசப்பான உண்மை.

இழந்த வாய்ப்புகளை சரிகட்டுவதற்கு அதிக நேரமில்லை. யாருடைய வற்புறுத்தலும் இல்லாமல் சொந்த முயற்சியால் இது நடக்கவேண்டும். சொந்த மண்ணில் நிலவும் அவசர நிலையை

## ‘அவனாவது மார்பில் குத்தினான்’ - கருணாநிதி



மனதில் கொண்டு, ஈழத்தமிழர்களின் உலகளாவிய கூட்டமைப்பு ஒன்று அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு காலக்கட்டத்திற்கும் குறிப்பிட்ட இலக்கை அடைய முயற்சி செய்யவேண்டும். மனித உரிமைகளுக்கான சர்வதேச ஐ. நா கூட்டமைப்பில் (UNHCR) கொழும்புடன் போராடிக்கொண்டிருக்கும் போதும் இதில் கொஞ்சம் ஆற்றலை ஒதுக்கலாம். ஈழநாடு இதில் இன்னும் காலம் கடத்த முடியாது.

இந்த வாரம் நிறைவு செய்வதற்கு முன்பாக, தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் சட்டசபையில் வெளியிட்ட ஓர் அறிவிப்பை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். எம். ஜி. ஆர். இறந்தபோது (24 டிசம்பர் 1987) வெடித்த காரணமில்லாத கலவரத்தில், திமுக தலைவர் கருணாநிதியின் சிலை அடித்து உடைக்கப்பட்டமை பலருக்கு நினைவிருக்கலாம். அதே இடத்தில் கருணாநிதியின் சிலையைத் தமிழக அரசு அமைக்கும் என்று ஸ்டாலின் அறிவித்துள்ளார். போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும்படி சிலைகள் அமைக்க உயர்நீதிமன்றம் தடை விதித்திருப்பதால், சட்ட நிபுணர்களைக் கலந்து ஆலோசித்தபிறகே இந்த முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். கருணாநிதியின் சிலை அதே இடத்தில் வைக்கப்பட வேண்டும் என்று ஈ. வெ. ரா பெரியார் ஆசைப்பட்டதாக திராவிட கழகத் தலைவர் கி. வீரமணி தன்னிடம் தெரிவித்ததாகவும் ஸ்டாலின் அறிவித்தார். “அண்ணா சாலையில் பெரியார், அண்ணா, எம். ஜி. ஆர் ஆகியோரின் சிலைகள் உண்டு. அங்கு நாங்கள் கலைஞரின் சிலையை வைப்போம். அதற்கு முன்பு சட்ட ஆலோசனையும் பெறுவோம்” என்று அவர் தெரிவித்தார்.

கொல்கத்தாவின் ‘ரெலிக்ராப்’ பத்திரிகையின் தமிழ்நாடு செய்தியாளராக இருந்த என் இனிய நண்பர் ஜி. சி. சேகர், இந்த சிலை உடைக்கப்படுவதை நேரில் பார்த்திருக்கிறார். ராஜாஜி ஹாலில் வைக்கப்பட்டிருந்த எம். ஜி. ஆர். பூதஉடலுக்கு மரியாதை செலுத்த

(19ஆம் பக்கம் பார்க்க)



# மூலோபாய நலனை நோக்கிய புதுடில்லி – கொழும்பின் நகர்வு

**பேராசிரியர் கே. ரீ. கணேசலிங்கம்**

இலங்கைக்கும் இந்தியாவுக்குமான புரிதல் தீவிரம் பெற ஆரம்பித்துள்ளது. பொதுஜன பெரமுன ஆட்சிக்கு வந்ததன் பிற்பாடு முரண்பாடுகளை அதிகம் பிரதிபலித்த இலங்கை - இந்திய உறவு, மாற்றத்திற்கு உள்ளாகி நெருக்கமான உறவை ஏற்படுத்துவதற்கான சமிக்ஞைகளை இலங்கை அரசாங்கமும் புதுடில்லியும் மேற்கொண்டு வருகின்றன. இத்தகைய புரிதலை ஏற்படுத்துவதில் இலங்கை வெளிவிவகார அமைச்சு மற்றும் இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் போன்றவர்களுடைய அணுகுமுறையோடு இந்திய இராணுவ அதிகாரிகளும், இந்திய வெளிவிவகார அமைச்சும் செயல்பட்டு வருகிறன.

இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள வெளியுறவு சார்ந்த நெருக்கடியில் இந்தியா பிரதான இடத்தை பெறுவதோடு இந்தியா ஊடாக மேற்குலகத்தில் இலங்கைக்கு ஏற்பட்டு இருக்கக்கூடிய நெருக்கடிகளை கையாள முடியுமென இலங்கை ஆட்சியாளர்களின் கொள்கை வகுப்பு பிரிவினர் தீர்மானித்துள்ளனர். அத்தகைய வரைவுக்குள் இந்தக் கட்டுரை இலங்கை - இந்திய சமச்சீரற்ற உறவை கடந்து, மூலோபாய உறவாக மாற்றுவதில் இரு தரப்பும் நகர்கிறது என்பதை விளங்கிக்கொள்வதற்கான முயற்சியாக உள்ளது.

முதலாவது, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் அண்மையில் இலங்கையின் புதிய வெளிவிவகார அமைச்சர் பீரிஸுடன் இணைந்து பணியாற்றுவதற்கு எதிர்பார்க்கிறேன் - விருப்பத்தை கொண்டுள்ளேன் என்றும், இருதரப்பு உறவுக்கு வழிகாட்டும் சிறந்த அயலுறவு நட்புறவின் முக்கியத்துவம் மற்றும் தலைமைத்துவத்தின் இலக்குக்கு அமைவாக இணைந்து பணியாற்ற விரும்புகிறார் என்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறே இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பால்கே வெளியுறவு அமைச்சராக பீரிஸ் பதவியேற்ற சந்தர்ப்பத்தில் அவரை சந்தித்த இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு குறித்து பேச்சு நடத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இரண்டாவது, இதே சந்தர்ப்பத்தில் இந்தியாவின் ஓய்வுநிலை இராணுவ அதிகாரியும், அரசியல் பாதுகாப்பு துறையின் ஆய்வாளருமான மேஜர் மதன்குமார் வழங்கிய செவ்வியில், இலங்கை - இந்திய உறவு ஒரு வர்த்தக ரீதியிலான உறவு மாத்திரமே என்றும் அதனை முன்னேற்றுவதற்கான மூலோபாய உறவு நிலையை நோக்கி எடுத்துச்செல்வதே மிலிந்த மொறகொடவின் நியமனம் என்று குறிப்பிட்டுள்ளதோடு, இலங்கையில் தற்போது நிகழும் குடும்ப ஆட்சியை எப்படி கையாள்வது என்பதை பற்றிய பின்புல வேலைகள் இந்திய அரசாங்கம் மேற்கொண்டு நிறைவடைந்து விட்டது எனவும் இதற்கு உண்டான அறிவிப்பு மிகவிரைவில் வெளிவரும் என தாம் எதிர்பார்ப்பதாகவும், அமெரிக்க - இந்திய உறவு இலங்கையில் அதிக மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கிறதெனவும் அத்தகைய மாற்றங்களூடாக இலங்கை அரசின் நடவடிக்கைகள் கையாளுவதற்கான பாதை மிக விரைவில் சாத்தியமாகுமென நம்பிக்கை வெளியிட்டார்.

மூன்றாவது, ஓய்வு நிலை இராணுவ அதிகாரியான ஆர். எஸ். வாசன் மூலோபாயக் கற்கைநெறி திருகோணமலைக்கு எனும் அமைப்புக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் குறிப்பிடும் போது, இந்தியாவின் கொல்லைப்புறமான இலங்கைத்தீவில் அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவின் இராணுவ தளமாக பயன்படுத்துமாக இருந்தால் அத்தகைய சவாலை கையாள்வதற்கு இந்தியா தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்ட வாசன், இந்துசமுத்திர பிராந்தியத்தில் இந்தியா அனுபவிக்கிற பூகோள அமைவிடமே இதற்கு காரணமென தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையை சீனா எந்தவோர் இராணுவ பயன்பாட்டுக்கும் உட்படுத்தினால் இந்திய ஆயுத களஞ்சியத்தில் இருக்கக்கூடிய சகல ஏவுகணைகளும் தாக்கக்கூடிய தொலைவிலேயே அந்த துறைமுகம் இருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. எந்தவோர் இராணுவ சாகசத்திலும் ஈடுபட முன்னர் சீனா கருத்தில் எடுக்க வேண்டிய அம்சம் இதுவாகும். அதேபோன்று பிரமாண்டமான முதலீடுகளை பெறும் வாய்ப்பைக்கொண்ட கொழும்பில் புதிய சர்வதேச நிதி நகரமும் நெருக்கடியான கால கட்டங்களில் தாக்குதல்களினால் இலகுவில் பாதிப்படைய கூடியதாக இருக்கிறது என்பதனை கவனம் கொள்ளுதல் வேண்டும் எனத் தெரிவித்தார்.

மேற்குறித்த மூன்று இந்திய கொள்கை வகுப்பின் மற்றும் அமுலாக்கலில் பங்கெடுப்பை கொண்ட அதிகாரிகளின் எண்ணங்களில் காணப்படும் விடயங்களை அவதானிக்க முடிகிறது. அதில், முதன்மையான எண்ணத்தை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்த கருத்துக்களிலிருந்து இலங்கையும் இந்தியாவும் மூலோபய உறவை நோக்கி நகர ஆரம்பித்துள்ளன என்பதை கோடிட்டு காட்டுகிறது. இதற்கு வலுச் சேர்க்கும் வகையிலேயே மதன்குமார் மற்றும் வாசன் போன்றவர்களின் கருத்துக்கள் உள்ளது.

இவர்கள் இருவரும் ஓய்வுநிலை இராணுவ அதிகாரிகளாக இருக்கின்றமையால் இவரின் எண்ணங்கள் எந்தளவுக்கு கொள்கை வகுப்பில் தாக்கத்தை செலுத்தும் என்பது கேள்விக்குரியது. ஆனால், இந்திய அரசாங்கத்தின் இறுதியிலும் இறுதியான நகர்வுகளை வாசன் அவர்களின் கருத்துநிலை உறுதிப்படுத்துகிறது. அது கொள்கை வகுப்பில் தாக்கத்தை செலுத்தாத போதும் இலங்கையுடனான அரசியல் உறவில் இத்தகைய எச்சரிக்கைகள் தாக்கத்தை செலுத்தக்கூடியதாக அமைந்து விடுவது வழமையான அரசியலாகும். இதன் பிரதிபலிப்பு இலங்கை அரசாங்கத்தின் அணுகுமுறைகளில் புவிசார் அரசியல் எல்லையையும் குறிப்பிடப்பட்ட அளவுக்கு மேல் மீற முடியாது என்பதை கோடிட்டு காட்டியதுடன், 2009ஆம் ஆண்டு போர்க் காலத்தில் பின்பற்றிய அதே மூலோபாயத்தை புதிய வடிவத்தில் இலங்கையும் தற்போது ஆரம்பித்துள்ளது.

இதற்கு பல காரணங்கள் அடிப்படையாக இருந்த போதும் அமெரிக்க - இந்திய உறவு அதற்கான அடிப்படை காரணங்களில் ஒன்றாகும். இரு நாடுகளும் இலங்கை விடயத்தில் கூட்டாக இயங்க முயற்சிக்கின்ற சந்தர்ப்பத்தை நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் மிலிந்த மொறகொட நகர்வுகளில் அவதானிக்க முடிகிறது. அதுமட்டுமன்றி இராணுவ ரீதியிலான விடயங்களில் இந்தியா இலங்கை தொடர்பில் கொண்டுள்ள அணுகுமுறையானது இலங்கையால் தவிர்க்க முடியாது இந்தியாவை அணுக இலங்கை முனைகிறது. அத்தகைய அணுகுமுறையின் ஆரம்பத்தை அல்லது தோற்றத்தை தனிமனித உறவுமுறைக்கூடாக கட்டியெழுப்புகிறது. அதாவது பிரதமர் நரேந்திர மோடிக்கும் மிலிந்த மொறகொடக்கும் இடையிலான நட்பு இலங்கை - இந்தியா மூலோபாய நட்பாக கட்டமைப்பதில் கவனத்தை செலுத்துகிறது. இதுவே, இலங்கை - இந்திய உறவுக்கான யதார்த்தமாகும். எல்லா சந்தர்ப்பங்களிலும் இலங்கை ஆட்சியாளர்கள் நெருக்கடிகளை முகாமை செய்யும் வலிமை கொண்டவர்கள். அத்தகைய நெருக்கடியானதொரு சூழலை இலங்கையின் வெளிவிவகாரத்தை கையாளும் அனைத்துத் தரப்பும் தமது இராஜதந்திர உத்திகளுக்கூடாக மேற்கொள்ள முனைந்துள்ளன. இதில், இந்திய தரப்பு மீளவும் இலங்கை ஆட்சியாளர்களின் மூலோபாய உத்திகளை நட்புறவின் உத்திகளாக அளவீடு செய்து பயணிப்பதோடு நெருக்கடிக்



அங்கீகரிக்க வேண்டிய நிலை எழுந்துள்ளது. இதனை ஆதாரப்படுத்தம் விதத்தில் இந்தியாவின் கிழக்கு கடற்படை பிராந்திய தளபதி வைஸ் அட்மிரல் ஜெனரல் அஜேந்திர பஹதூர் சிங் மன்னார் தீவுக்கும் தலைமன்னாருக்கும் அண்மையில் (23.07.2021) மேற்கொண்ட விஜயம் தெளிவுபடுத்தக் கூடியதொன்றாகும்.

எனவே, இலங்கையின் இந்தியா பொறுத்த அணுகுமுறை என்பது இந்தியாவின் நெருக்கடிகளுக்குள்ளால் மாற்றத்துக்கு உந்தப்பட்டுள்ளது. அத்தகைய மாற்றம் சீன - இலங்கை நட்புறவினால் ஏற்பட்ட நெருக்கீடாகவே புரிந்து கொள்ளப்படுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியா ஒரு கொள்கை மாற்றத்தை மேற்கொள்வதற்கு பதிலாக இலங்கை அரசாங்கம்மீது நெருக்கடியை ஏற்படுத்தி அதன்மூலமாக இலங்கையின் கொள்கை மாற்றம் உருவாக்க முடியுமென கருதி செயல்படுகிறது. ஆனால், இலங்கை அரசாங்கமோ அல்லது இலங்கையின் கொள்கை வகுப்பாளர்களோ இந்தியா பொறுத்து காலங்காலமாக பின்பற்றி வந்த கொள்கையில் மாற்றம் குறித்த சிந்திக்காது மூலோபாய மாற்றம் குறித்து நகர தொடங்கி உள்ளனர்.

இந்தியாவின் இந்துத்துவ அரசுக்கு ஏற்ற குறிகாட்டிகளையும் சுலோகங்களைம் முன்னிறுத்திக்கொண்டு கூடாக குறுகிய நன்மைகளை அடைவதிலும் அவற்றை தமக்குரியதாக்குவதிலும் கவனம் கொள்கின்றனர். ஓய்வுநிலை கொமான்டர் வாசனின் கருத்தில் முன்னிறுத்தப்பட்ட கொழும்பு நிதி நகர முதலீடு சார்ந்து அமெரிக்கா, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகளும் முதலீடுகளை மேற்கொள்ள திட்டமிடுகின்றது என்பது அவரது கருத்துநிலையின் பலவீனத்தை தெளிவுபடுத்துகிறது.

எனவே, இலங்கை-இந்திய நட்புறவு இந்திய தரப்பின் குறுகிய நோக்கங்களையும் இலங்கை தரப்பின் நீண்டகால நலன்களையும் மையப்படுத்தி நகர்வதை அவதானிக்க முடிகிறது. சுதந்திர இந்தியாவின் இலங்கை பொறுத்த கொள்கை இத்தகைய குறுகிய நோக்கங்களுக்கான பயணமாகவே அமைந்திருக்கின்றது. ஆயினும், இலங்கை ஆட்சியாளர்கள் நெருக்கீடுகளை முகாமை செய்வதனூடாக நீண்டகால நலன்களை அடையும் இராஜதந்திரத்தை கடந்த காலத்தில் எவ்வாறு கையாண்டு நகர்ந்தார்களோ அவ்வாறே சமகாலத்திலும் மேற்கொள்ள முனைகின்றனர். இதன் விளைவுகள் இலங்கை தமிழரின் அரசியலில் அதிக பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாக அமைய வாய்ப்புள்ளது. காரணம் தமிழர் தரப்பு எத்தகைய அரசியல் நகர்வையும் மேற்கொள்ளாத போக்கு நீட்சி பெறுகிறது. **- நன்றி: அருவி**

# கனடா அரசியலில் தமிழர்கள்




**எதிர்வரும் 20ஆம் திகதி கனடாவில் நடக்கவிருக்கும் 44ஆவது தேர்தலில் சுமார் 10 தமிழர்கள் போட்டியிடப் போகின்றனரென இதுவரை தெரிய வந்துள்ளது. லிபரல் கட்சியின் சார்பில் ஹரி ஆனந்தசங்கரி மீண்டும் ரூஜ் பார்க் தொகுதியில் மூன்றாவது முறையாகப் போட்டியிடுகின்றார்.**

குரு அரவிந்தன்

1983 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தை அடுத்து, இலங்கைத் தமிழர்கள் பலர் பல நாடுகளுக்கும் புலம்பெயர்ந்தபோது, அதிகமானவர்கள் கனடா நாட்டுக்குப் புலம் பெயர்ந்தார்கள். ஒன்ராறியோ மாகாணத்தில்தான் அதிக தமிழர்கள் வாழ்வதால், இவர்கள் முதலில் தங்கள் இருப்பை உறுதி செய்தபின், பல்வேறு சமூகச் செயல்பாடுகளிலும் தங்களை உட்படுத்திக் கொண்டனர். எந்த நாடாக இருந்தாலும், இறுதி முடிவு எடுக்கும் நிலை அந்த நாட்டு அரசைச் சார்ந்திருப்பதால், அரசியலில் ஈடுபாடு கொண்ட சிலர் தேர்தல் மூலம் பதவிகளுக்காகப் போட்டி போட முன்வந்தனர். பிறர் நலன் கருதிப் போட்டி போடுவதாகப் பிரசாரம் செய்தால்தான் ஜனநாயக நாட்டில் வெற்றி பெறுவதற்கு வாய்ப்புண்டு. பதவிக்கு வந்தபின் அரசியல்வாதிகள் எப்படி மாறுவார்கள் என்பது சந்தர்ப்ப, சூழ்நிலையைப் பொறுத்தது. கனடாவில் கோவிட் பேரிடர் காரணமாக முக்கிய பிரச்னைகளாக சுகாதார வசதி, வாழ்க்கைச் செலவு, வருமானவரி, பொருளாதாரம், வீட்டுவசதி, முதியோர் பிரச்னை, குடியேற்றம், கல்வி, வேலை வாய்ப்பின்மை, மற்றும் பருவநிலை மாற்றம் போன்ற பொதுவான பிரச்னைகளை மக்கள் இப்போது எதிர் கொள்கின்றார்கள்.

அரசியல் சட்ட முடியாட்சி முறையை அடிப்படையாக கொண்ட கனடா நாட்டின் தலைவராக 1952ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத் இருந்து வருகிறார். கனடா பத்து மாகாணங்களையும் மூன்று ஆட்சி நிலப் பகுதிகளையும் கொண்ட கூட்டமைப்பு நாடாகும். கனடா மூன்று நிலை அரசுகளைக் கொண்டது. அவையாவன முதலாவது நடுவண் அரசு, இரண்டாவது மாகாண, ஆட்சிப் நிலப்பரப்பு அரசுகள், மூன்றாவது நகராட்சி, ஊர் அரசுகள் ஆகும். இதைவிட கல்வி பற்றி முடிவெடுக்கும் கல்விச் சபைகளும் இருக்கின்றன. அதன் அங்கத்தவர்கள் தெரிவுக்கும் அவ்வப்பகுதிகளில் தேர்தல் உண்டு. அடிப்படைக் கல்வியும் உயர்கல்வியும் அரச, தனி யார் துறைகளால் வழங்கப் படுகின்றன. மேல்நிலைப் பல்கலைக்கழக படிப்புக்களை அரசே செயல்படுத்து கின்றது. கல்விச்சபைகள் தமிழ் மொழியை ஒரு பாடமாக அங்கீகரித்து இருக்கின்றன. சர்வதேச மொழித்திட்டத்தின் கீழ் தமிழ் மொழியையும் ஒரு பாடமாக விரும்பியவர்கள் எடுக்கலாம். இதைவிட பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்குத் தேவையான 'கிறடிட்' எடுப்பதற்கும் தமிழ் மொழியை இங்கே ஒரு பாடமாக எடுக்கமுடியும்.

மக்களால் தேர்தல் மூலம் நேரடியாகத் தெரிவு செய்யப்படும் 308 உறுப்பினர்களைக் கொண்ட மக்களவையே கனடா பாராளுமன்றத்தின் முக்கிய பிரிவு ஆகும். சுமார் 25 கட்சிகள்வரை கனடாவில் பதிவு செய்திருந்தாலும் பழமைவாதக் கட்சி, கனடா நடுநிலைமைக் கட்சி, குபெக்குவா கட்சி, கனடா புதிய ஜனநாயகக் கட்சி, கனடா பசுமைக் கட்சி ஆகியன நடுவண் அரசில் முக்கிய கட்சிகளாக இருக்கின் றன. கனடாவின் அரசியலமைப்புச் சட்டம் அதிகாரங்களையும் கடமைகளையும் வரையறை செய்து, சட்ட உருவாக்க வழிமுறைகளையும் விபரிக்கின்றது. இதன் அங்கத்தவர்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுகின்றனர். கனடாவில் இதுவரை 14 சிறுபான்மை அரசுகள் ஆட்சி செய்திருக்கின்றன.

அரசே எல்லா முடிவுகளையும் எடுப்பதால், பல்லின மக்களும் இங்கு வாழ்வதால், ஓர் இனத்தின் அரசியல் பங்களிப்பு மிகமுக்கியமானதாகும். 2009 ஆண்டுக்குப் பின், இலங்கையில் இருந்த சூழ்நிலை காரணமாகத் தேவை கருதித் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு கனடாவின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினராக 2011 ஆம் ஆண்டு ராதிகா சிற்சபைஈசனை தெரிவு செய்தார்கள். அவரது பதவிக்காலம் முடிந்தபின், அதைத் தொடர்ந்து ஹரி ஆனந்தசங்கரி பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப் பட்டார்.

ஒன்ராறியோ மாநில உறுப்பினர்களாக லோகன் கணபதி, விஜய் தணிகாசலம் ஆகியோர் இருக்கின்றார்கள். இதைவிட ரொறன்ரோ, மார்க்கம் கல்விச் சபைகளின் தேர்தலில் போட்டியிட்டு நால்வர் வெற்றி பெற்றிருக்கின்றார்கள். யாழினி ராஜகுலசிங்கம், அணு சிறீஸ்கந்தராஜா. பார்த்தி கந்தவேள், மற்றும் மார்க்கத்தில் யுயனிதா நாதன் ஆகியோர் வெற்றி பெற்றனர். மொத்தமாக 7 தமிழர்கள் தற்போது கனடா அரசியலில் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். அரசியலில் ஈடுபாடு கொண்ட நீதன் சண் பற்றியும்


கட்டுரையாளருடன் ஹரி ஆனந்தசங்கரி

குறிப்பிட வேண்டும், இவர் ரொறண்டோ நகர சபையின் முன்னாள் உறுப்பினரும், ஒன்ராரியோ மாகாணத்தின் புதிய ஜனநாயகக் கட்சியின் முன்னாள் தலைவருமாவார்.

இம்முறை செப்ரெம்பர் 20 ஆம் திகதி கனடாவில் நடக்கவிருக்கும் 44வது தேர்தலில் சுமார் 10 தமிழர்கள் போட்டியிடப் போகின்றனரென இதுவரை தெரிய வந்துள்ளது. லிபரல் கட்சியின் சார்பில் ஹரி ஆனந்தசங்கரி மீண்டும் ரூஜ் பார்க் தொகுதியில் மூன்றாவது முறையாகப் போட்டியிடுகின்றார். இவர் பொது மக்களின் அனேகமான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதால், பலராலும் அறியப்பட்டவர். தை மாதத்தை தமிழர்களின் மரபுத் திங்களாகக் கனடா அரசாங்கத்தால் அங்கீகரிப்பதற்கு முன்னின்று உழைத்தவர்.

இவரைவிட தற்போது அமைச்சராக இருக்கும் அனிதா ஆனந்த் மீண்டும் போட்டியிடுகின்றார். அல்போன்ஸ் ராஜகுமார் என்பவரும் சஸ்கச்சுவானில் லிபரல் கட்சியில் புதிதாகப் போட்டியிடுகின்றார். கிறீன் கட்சியில் அர்ஜூன் பாலசிங்கம், கொன்சவேட்டிவ் கட்சியில் மல்கம் பொன்னையன் மற்றும் சஜந்த் மோகனகாந்தன், புதிய ஜனநாயகக் கட்சி சார்பாக வான்கூவரில் அஞ்சலி அப்பாத்துரை, மக்கள் கட்சி சார்பாக ஜோர்ச் அன்ரனி, குபெக்குவா சார்பாக ஷோபிகா வைத்தியநாதசர்மா போன்றவர்களும் இம்முறை தேர்தலில் போட்டியிடுவதாகத் தெரிகின்றது. சுயேச்சையாக பிராம்டன் மேற்கில் போட்டியிடும் சிவகுமார் ராமசாமி இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டவர்.

இங்கே உள்ள தமிழர்கள் வேட்பாளரின் தனிப்பட்ட திறன்களுக்காகவும், தாயகப் பிரச்னைகளில் உறுதியான கருத்துக் கொண்டவர்களையும் மட்டுமே அங்கீகரிக்கிறார்கள். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் முக்கியமான விடயங்களில் 'ஒற்றுமை' என்ற நிலை எம்மவர்களிடம் இல்லை என்பதற்குப் பல உதாரணங்களைக் கடந்த தேர்தல்கள் மூலம் எடுத்துச் சொல்ல முடியும். சுயநலத்திற்காக, பணத்திற்காக, பதவிக்காக, காழ்ப்புணர்வுக்காக என்று ஒருசிலரால் பல சந்தர்ப்பங்களில் தமிழ் மக்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். 2019 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர்களைவிட நான்கு மடங்கு அதிகமான சீக்கியர் இனத்தைச் சேர்ந்த 18 பேர் ஒற்றுமையாகச் செயற்பட்டு வெற்றி பெற்றிருந்தது மட்டுமல்ல, முக்கியமான அமைச்சர் பதவியையும் ஒருவர் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, போல்டன் என்ற இடத்திற்கு லிபரல் கட்சியின் சார்பாகப் பிரசாரத்திற்காக ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி சென்ற போது, ஒருசிலர் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்த முனைந்ததால், பாதுகாப்புக் காரணங்களுக்காக அந்தக் கூட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களின் நலன்கள்பற்றிக் கவலைப்படாமல், சுயநலமாக இயங்கும் ஒரு கூட்டம் இங்கேயும் இருக்கத்தான் செய்கின்றது. 2019 ஆண்டு தேர்தலில் லிபரல் கட்சி 338 ஆசனங்களில் 157 ஆசனங்களையும், கன்சவேட்டிக் கட்சி 121 ஆசனங்களையும் கைப்பற்றியிருந்தன. கனடாவில் தனியாக ஆட்சி அமைப்பதற்கு 170 ஆசனங்கள் தேவைப்படுகின்றன. கன்ச வேட்டிக் கட்சி அதிக வாக்குகளைப் பெற்றிருந்தாலும், அதிக ஆசனங்களைப் பெறவில்லை.

இம்முறை கனடிய பொதுத்தேர்தலில் எந்த ஒரு கட்சியும் தனியாக அரசை அமைக்கப் பேவதில்லை என்று The Writ Polls என்ற தனியார் நிறுவனத்தில் பணியாற்றும் தேர்தல் கருத்துக் கணிப்பு நிபுணரான Erick Grenier குறிப்பிட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. கோவிட் - 19 இன் பேரிடர் பாதிப்பு, அரசாங்கக் கட்டுப்பாடு, பொருளாதார நெருக்கடி, வேலையின்மை, பாடசாலைகள் இயங்காமை, தனிமைப்படுத்தல் போன்ற பல காரணங்கள் மக்கள் மனதைப் பெருமளவில் மாற்றியிருப்பதால், புதிதாக வரும் அரசாங்கம் பல பிரச்னைகளை எதிர்நோக்க வேண்டிவரலாம். கோவிட்-19 பேரிடர் கனடாவுக்கு மட்டுமல்ல, இது எல்லா நாடுகளுக்கும் உள்ள பொதுவான பிரச்னையாக இருந்தாலும், இதுவே கனடாவில் இந்தத் தேர்தலின் வெற்றி தோல்விகளை இம்முறை நிர்ணயிக்கப் போகின்றது. ■


தமிழ் மக்களுடைய பொங்கல் நிகழ்வு ஒன்றில் கனடிய பிரதமர்

மருத்துவர் செ. போல்ரன் றஜீவ் MD(S).

# தமிழ் மருத்துவ அடிப்படையில் உடலிற்கு தேவையான உயிர்வாயுவை கூட்டிக்கொள்ளல்

கோவிட்டின் டெல்டா வகையின் கொடூர தாண்டவத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் எமது நாட்டின் கோவிட்டினால் ஏற்பட்ட சராசரி இறப்பு சதவீதம் 1.97% - 2.06% ஆக உயர்ந்துள்ள இந்நாட்களில் பாதிக்கப்பட்டு தீவிர சிகிச்சையில் வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டெயிருக்கும் இன்றைய நிலையில், அவர்களுக்கான உயிர்வாயு (Oxygen) பற்றாக்குறையும் நிலவிவருகின்றமையும், இந்தியாவிலிருந்து Oxygen சிலிண்டர்கள் கொள்வனவு செய்கின்றமை அனைத்தும் அன்றாடம் செய்திகள் மூலம் கேட்டவண்ணம் இருக்கின்றோம்.

கோவிட் குறிகுணங்கள் தென்பட்டு, தீவிரத்தன்மைக்குப் போகாதபடி மக்கள் அவதானமாக இருப்பதற்கு, வீட்டில் காணப்படும் அன்றாடம் பயன் படுத்தக்கூடிய மூலிகைகளைக் கொண்டு உடலிற்குத் தேவையான உயிர்வாயுவைக் (Reactive Oxygen) கூட்டிக் கொள்ளும் Reactive Oxygen Species (ROS) I எமது சமையலறையிலிருந்தே தெரிவுசெய்து இந்த Lockdown காலகட்டத்தில் பயன்படுத்திக் கொள்வதென்பது எமது முதற் கடமையாகும். அந்த வகையில், ஓமம், கராம்பு, மஞ்சள், வெற்றிலை போன்றவை ROS ஆகத் தொழிற்படுவவை என்பது பல்வேறு ஆய்வுகளின் படி நிரூபிக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

இந்த ROS இனை எவ்வாறு பயன்படுத்திக்கொள் ளலாம் என்ற முறைகளைப்பற்றிப் பார்ப்போமானால்:

ஓமப் பொட்டணம், மஞ்சள் திரி, மஞ்சள் கற்கம், கராம்புக்குடிநீர் என்பனவற்றைப்பயன்படுத்தி கோவிட்19 இல் காணப்படும் குறிகுணங்களையும் இதன் தீவிரத்தன்மையையும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவும், ஒருவருக்கு தான் முன்னர் செய்த தனது அன்றாட வேலைகளை செய்யும் போது அதாவது வீடு கூட்டியபின்னர், தனது ஆடைகளை சலவை செய்த பின்னர், மேல்மாடி படி ஏறி, இறங்கினால் மூச்சுக்கஷ் டம், களைப்பு ஏற்படுமாயின் கட்டாயம் அவர்களின் Oxygen அளவில் குறைவு ஏற்பட்டுள்ளமை கண்கூடு. இப்படியான குறிகுணங்கள் தென்படுபவர்கள் இந்த ROS இனைப்பயன்படுத்தி குறிகுணங்கள் குறை கின்றனவா என அறிந்து கொள்ள வேண்டும். இல்லையேல் கண்டிப்பாக வைத்தியரின் ஆலோ சனையைப் பெற வேண்டும். சரியாகி விடும் சரியாகி விடும் என பொறுத்திருக்காது எமது சமையலறைகளில் காணப்படும் உணவே மருந்தாகும் என அவற் றைப்பயன்படுத்தி ஆரோக்கியமாக இருப்போம்.

## ஓமப் பொட்டணம்



1. ஓமம் - 100 கிராம்
2. கற்பூரம் (Camphor) - 10 கிராம்
3. கராம்பு - 10 கிராம்

அனைத்தையும் தனித்தனியாக தூளாக்கி பின்னர் நன்றாகக்கலந்து 2 கிராம் முதல் 3 கிராம் சிறிய பொட்டணங்களாகச் செய்து கொள்ளவேண்டும்.

ஓமப் பொட்டணத்தை இரண்டு மணிநேரத்திற் கொரு தடவை ஒவ்வொரு மூக்கிலும் வைத்து இழுத்துக் கொள்வதன் மூலம் சிறந்த பலனைப்பெறமுடியும். இதோடு இதனைத் தொடர்ந்து முகர்வதோ அல்லது முகக்கவசத்திற்குள் தொடர்ச்சியாக வைத்துக் கொண்டி ருத்தல் போன்றவற்றைச் செய்யக்கூடாது. இவ்வாறு செய்தால் தலைவலி ஏற்படும். கட்டாயமாக இரண்டு மணிநேரத்திற்கொரு தடவை என்ற நேரஇடைவெளி யில் ஒவ்வொரு மூக்கிலும் இழுத்தல் சிறந்த பலனைத் தரும்.

## மஞ்சள் திரி



1. மஞ்சள் - 100 கிராம்
2. ஓமம் - 20 கிராம்
3. கராம்பு - 20 கிராம்

இவற்றை தனித்தனியே தூளாக்கி, வெற்றிலைச்சாறு விட்டு குழைத்து துணியில் தடவி உருட்டி நன்றாக உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும்.

மூக்கடைப்பு, தலைப்பாரம், தலைவலி, மணமின்மை போன்ற கோவிட்டின் குறிகுணங்களில் இந்தத்திரியை எரியூட்டி வருகின்ற புகையை ஒவ்வொரு மூக்குத்து வாரத்தினூடாக உள்ளிழுக்கவும். தேவைக்கேற்ப பயன்படுத்திய பின்னர் திரியை அணைத்து வைத்து மீண்டும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## மஞ்சள் கற்கம்



1. மஞ்சள் - 100 கிராம்
2. ஓமம் - 20 கிராம்
3. கராம்பு - 20 கிராம்
4. வெற்றிலை - 2 (சிறியளவு)
5. மிளகு - தே.க

மஞ்சள், ஓமம், கராம்பு போன்றவற்றை தனித்தனியே தூளாக்கி வைத்துக் கொள்ளவும். வெற்றிலையையும், மிளகையும் குடிநீராக்கிக் கொள்ளவும். தூள் அனைத் தையும் ஒன்றாக்கி, அதனுடன் ஏற்கனவே தயாரித்த குடிநீரையும் சேர்த்து கழற்சிக் கொட்டையளவு (2-3 கிராம்) கற்கமாக்கிக் கொள்ளவேண்டும்.

தினமும் காலையில் ஒரு கற்க உருண்டையை வெறுவயிற்றில் எடுத்துக் கொள்ள வேண்டும். அல்லது ஒரு கற்கஉருண்டையை வெற்றிலையில் மடித்துமென்று தின்னவேண்டும்.

## கராம்புக்குடிநீர்



1. கராம்பு - 20 கிராம்
2. இலவங்கப்பட்டை - 20 கிராம்
3. ஓமம் - 20 கிராம்
4. அதிமதுரம் - 20 கிராம்
5. ஏலம் 20 கிராம்
6. கொத்தமல்லி - 200 கிராம்

இவற்றை குறிப்பிட்டளவு எடுத்து தனித்தனியே அருவல் நொருவலாக இடித்துக் கொள்ள வேண்டும்.

1 லீட்டர் தண்ணீரை நன்கு சூடாக கொதிக்க வைத்து, இடித்த பொருட்களை கொதிக்கும் தண்ணீரி னுள் போட்டு உடனே அடுப்பிலிருந்து இறக்கி வைத் துப்பயன்படுத்த வேண்டும். தண்ணீரை சுண்டக் காய்ச் சியோ, வற்றக்காய்ச்சியோ பயன்படுத்தக்கூடாது. தேநீர் தயாரிப்பது போல் தண்ணீரை சூடாக்கி இதனுள் மற்றைய சரக்குகளைப் போட்டு வெந்நீர் ஊறல் கசாயமாக (Hot Infusion) 10 மிலி. முதல் 30 மிலி வரை ஒரு நாளைக்கு இருவேளை பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

இந்த ஓமப் பொட்டணம், மஞ்சள் திரி, மஞ்சள் கற்கம், கராம்புக்குடிநீர் என்பனவற்றில் ஒன்றையோ அல்லது அனைத்தையுமோ பயன்படுத்தி கோவிட்19 இல் காணப்படும் குறிகுணங்களையும் இதன் தீவிரத்தன்மை யையும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதுடன் உட லிற்குத் தேவையான உயிர்வாயுவை 99-100 வீதமாக வைத்திருப்போம். இவை தவிர அளவான உடற்பயிற்சி யும், சில குறிப்பிட்ட நுரையீரலை பலப்படுத்தும், அதன் வாயுக் கொள்ளளவை அதிகரிக்கும் யோகாசனங்களை யும் தினம் செய்து வர வேண்டும். இவ்வாறாக தமிழ் மருத்துவ அடிப்படையில் பரிந் துரைக்கப்பட்ட உட லிற்குத் தேவையான உயிர்வாயு வைக் கூட்டிக்கொள் ளும் முறைகளைப் பின்பற்றி நலமாக வாழ்வோம். ■

பேட்ரிக் ஜாக்சன்



# உலக ஒழுங்கை மாற்றிய இரட்டை கோபுர தாக்குதல்

கடந்த 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி தற்கொலைகுண்டு தாக்குதல்தாரிகள், அமெரிக்க பயணிகள் விமானத்தை கைப்பற்றி அதை நியூயோர்க்கில் உள்ள வானுயர்ந்த கட்டடங்களில் மோதி ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழக்க காரணமாக இருந்தனர்.

இந்த தாக்குதல் உலக வரலாற்றில் மிக மோசமான ஒரு தாக்குதல். அமெரிக்கா மட்டுமல்ல பிற நாடுகளும் இந்த தாக்குதலை அவ்வளவு எளிதாக மறந்துவிட முடியாது.

**தாக்குதல் இலக்குகள்?**

அமெரிக்காவின் கிழக்கு பகுதியில் பறந்து கொண்டிருந்த நான்கு சிறிய விமானங்களை ஒரே சமயத்தில் தீவிர வாத குழுவினர் கடத்தினர்.

அதன்பிறகு நியூயோர்க் மற்றும் வாஷிங்டனில் உள்ள கட்டடங்களை தாக்குவதற்கான ஓர் ஏவுகணை போல அந்த விமானங்கள் செயல்பட்டன.

இரு விமானங்கள் நியூயோர்க்கில் உள்ள உலக வர்த்தக மையத்தை தாக்கின. முதல் விமானம் 'நோர்த் ட்வர்' என்று சொல்லப்படும் கட்டடத்தை உள்ளூர் நேரப்படி 8.46 மணியளவில் தாக்கியது. இரண்டாவது விமானம் சவுத், வரை 9.03 மணிக்கு தாக்கியது.

கட்டடம் தீப்பற்றி எரிந்தது. கட்டடத்தின் மேல் மாடிகளில் பலர் சிக்கி தவித்தனர். புகை நகரம் முழுவதும் சூழ்ந்தது. இரண்டே மணி நேரத்தில் 110 மாடி கட்டடமும் சரிந்து விழுந்து புகை மண்டலத்தை உருவாக்கியது.

9.37 மணியளவில் மூன்றாவது விமானம் பென்டகனின் மேற்கு பகுதியை தாக்கியது. பென்டகன் என்பது அமெரிக்க இராணுவத்தின் பிரமாண்ட தலைமையகம். இது நாட்டின் தலைநகரமான வாஷிங்டன் டி.சியில் உள்ளது.

நான்காவது விமானம் பென்சில் வேனியாவில் உள்ள வயல்வெளி ஒன்றில் நொறுங்கி விழுந்தது. ஆனால், இந்த விமானம் பாராளுமன்ற கட்டடமான கேபிட்டலின் மீது மோத திட்டமிடப் பட்டிருந்ததாகவும் பயணிகள் சண்டை யிட்டதால் அது வயல்வெளியில் மோதப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது.

**எத்தனை பேர் உயிரிழந்தனர்?**

மொத்தம் 2,977 பேர் உயிரிழந்தனர். இதில் பலர் நியூயோர்க்கை சேர்ந்தவர்கள். இதில் விமானத்தை கடத்தியவர்கள் 19 பேர் சேர்க்கப்படவில்லை.

விமானங்களில் இருந்த 246 பயணிகள், விமான ஊழியர்கள் என அனைவரும் உயிரிழந்தனர்.

இரட்டை கோபுரத்தில் 2606 பேர் உயிரிழந்தனர்.

பென்டகனில் மொத்தம் 125 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த இளம் வயது நபர் இரண்டு வயது குழந்தை கிறிஸ்சின் லீ ஹான்சன் ஆவார். இந்த குழந்தை தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட விமானங்கள் ஒன்றில் தனது பெற்றோர் பீட்டர் மற்றும் சூவுடன் பயணம் செய்தது.

இதில் பலியான வயதானவர், 82 வயது ரொபட் நார்டன். இவரின் மனைவி ஜாக்குலினுடன் திருமணம் ஒன்றிற்கு சென்று கொண்டிருந்தார்.

முதல் விமானம் கட்டடத்தில் மோதியபோது சுமார் 17 ஆயிரத்து 400 பேர் கட்டடத்தில் சிக்கியிருந்தனர். நோர்த் ரவரில் பாதிப்புக்கு எளிதாக உட்பட்ட பகுதியில் யாரும் தப்பிக்க வில்லை ஆனால் சவுத் ரவரின் அந்த பகுதியில் இருந்து 18 பேர் தப்பினர். பல்வேறு நாடுகளை சேர்ந்த 77 பேர் உயி ரிழந்தனர். பேரழிவு மீட்பு பணியில் உள்ள 441 பேரை இழந்தது நியூயோர்க் நகரம்.

ஆயிரக்கணக்கானவர்கள் காய மடைந்தனர். பலருக்கு தாக்குதல் தொடர்பான உடல்நலக் குறைவுகள் ஏற்பட்டன. விஷத்தன்மை கொண்ட இடிபாடுகளில் பணியாற்றிய தீயணைப்பு வீரர்களுக்கு பல்வேறு உடல்நல கோளாறுகள் ஏற்பட்டன.

**தாக்குதல்தாரிகள் யார்?**

இஸ்லாமியவாத கடும்போக்கு இயக்கமான அல் ஹைடா, ஆப்கானிஸ் தானிலிருந்து ஒசாமா பின் லேடனின் தலைமையில் இந்த தாக்குதலை நடத்தியது. அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகள் முஸ்லிம் நாடுகளில் சண்டையை உருவாக்குவதாக அந்த இயக்கம் குற்றம் சாட்டியது. விமா னத்தை கடத்திய செயலில் 19 பேர் ஈடுபட்டனர். மூன்று குழுக்களாக ஐந்து பேர் இருந்தனர்.
பென்னிசில்வேனியாவில் மட்டும் நான்கு பேர் இருந்தனர்.

ஒவ்வொரு குழுவிலும் விமான இயக்க தெரிந்த ஒருவர் இருந்தனர். அவர்கள் அமெரிக்காவில் உள்ள விமானிகள் பயிற்சி பள்ளியில்தான் பயிற்சி பெற்றனர்.

**அமெரிக்கா எதிர்வினை?**

இந்த தாக்குதல் நடைபெற்ற ஒரு மாதத்திற்கும் குறைவான காலத்தில் அப்போது அமெரிக்க அதிபராக இருந்த ஜோர்ஜ் டபிள்யு புஷ் அல் ஹைடாவை அழிக்கவும் ஒசாமா பில் லேடனை பிடிக்கவும் ஆப்கானிஸ்தானில் போர் தொடுத்தார். இதற்கு சர்வதேச நாடுகளுடன் கூட்டணி அமைக்கப் பட்டது.

இருப்பினும் 2011ஆம் ஆண்டுதான் ஒசாமா பின்லேடனை பாகிஸ்தானில் கண்டறிந்து கொன்றது அமெரிக்க படை. இந்த தாக்குதலுக்கு திட்டமிட்டு கொடுத்த காலித் ஷேக் முகமது பாகிஸ் தானில் கைது செய்யப்பட்டார். இன்ற ளவும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

அல் ஹைடா என்ற இயக்கம் இன்ற ளவும் உள்ளது. ஆபிரிக்க துணை சஹாரா பகுதியில் வலுவாக உள்ளது. இருப்பினும் ஆப்கானிஸ்தானிலும் அதன் உறுப்பினர்கள் உள்ளனர். கிட்ட தட்ட 20 வருடங்களுக்கு பிறகு அமெ ரிக்க படைகள் ஆப்கானிஸ்தானை விட்டு சில தினங்களுக்கு முன் வெளியேறின. இதனால் அல் ஹைடா இயக்கம் மீண்டும் அங்கு வரும் ஆபத்து உள்ளதாக பலரும் அஞ்சுகின்றனர்.

விமானத்தை கடத்தியவர்களில் 15 பேர் சவுதியை சேர்ந்தவர்கள். இருவர் ஐக்கிய அரபு எமிரேட்ஸை சேர்ந்த வர்கள், ஒருவர் எகிப்தை சேர்ந்தவர் மற்றும் ஒருவர் லெபனானை சேர்ந்தவர்.

**9/11க்கு பிறகு மாறிய சூழல்**

9/11 தாக்குதலுக்கு பிறகு உலகம் முழுவதும் உள்ள விமானங்களின் பாது காப்பு தீவிரப்படுத்தப்பட்டது. அமெரிக்காவில் விமானங்கள் மற்றும் விமான நிலையங்களில் பாதுகாப்பை கவனிக்க இதற்கென தனி போக்குவரத்து பாதுகாப்பு பிரிவு ஏற்படுத்தப்பட்டது. தாக்குதலுக்கு உள்ளான இரட்டை கோபுர இடிபாடுகளை சுத்தப்படுத்த கிட்டதட்ட எட்டு மணிநேரம் ஆனது.

அங்கு ஒரு நினைவிடமும், அருங் காட்சியகமும் உள்ளது. கட்டடம் மீண் டும் வேறு வடிவத்தில் கட்டப்பட்டுள் ளது. மீண்டும் கட்டப்பட்ட கட்டடம் 541மீட்டர் (1,776 அடி) உயரம் கொண் டது. இதற்கு ஒன் வேர்ட் ட்ரேட் சென்டர் என்று அழைக்கப்படுகிறது. இது முன்பு இருந்த நோர்த் ரவரை காட்டிலும் உயரம் அதிகம். முன்பு இருந்த நார்த் டவர் 1,368 அடி உயரம். பென்டகனில் மறுகட்டமைப்பு ஒரு வருடத்தில் நடைபெற்றது. ஓகஸ்ட் 2002 அன்று ஊழியர்கள் பணிக்கு வந்துவிட்டனர்.





வினோத் இயக்கத்தில் அஜித்குமார் நடிக்கும் வலிமை திரைப்படத்தின் படப்பிடிப்பு முழுமையாக நிறைவடைந்துள்ளது.

முன்னதாக எடுத்த படத்தின் இறுதிக்கட்ட பணிகள் நிறைவடைந்து விட்டன. இந்த நிலையில் கடைசியாக ரஷ்யாவில் எடுத்த காட்சிகளை இறுதி செய்தால் மட்டும் போதும் படம் வெளியீட்டுக்கு தயாராகி விடும்.

படம் நவராத்திரிக்கு அல்லது தீபாவளிக்கு வெளியாகும் என்று கூறப்படுகின்றது. உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும்.



லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் இரும்புக் கை மாயாவி என்ற படத்தில் சூர்யா நடிக்கவுள்ளார். 'சுப்பர் ஹீரோ' படமாக இந்தப் படம் உருவாகவுள்ளது. சூர்யா தற்போது ஞானவேல் இயக்கும் ஜெய்பீம், பாண்டிராஜ் இயக்கும் எதற்கும் துணிந்தவன் போன்ற படங்களில் நடித்து வருகிறார். இதன் பிறகு, வெற்றி மாறன் இயக்கும் வாடிவாசல் படத்தில் நடிக்கவுள்ள சூர்யா, இந்தப் படம் முடிவடைந்த பின்னரே, லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் நடிப்பார் என்று கூறப்படுகின்றது.

# திரை விமர்சனம்




**திரைப்படம் - கசடதபற**
**இயக்கம் - சிம்புதேவன்**
**நடிகர்கள்- சந்தீப் கிஷன், ஹரிஷ் கல்யாண், சாந்தனு, பிரேம்ஜி, வெங்கட் பிரபு, ரெஜினா, பிரியா பவானி சங்கர், விஜயலட்சுமி**
**வெளியீடு - 27 ஓகஸ்ட் 2021**

நாம் ஓர் இடத்தில் இருந்து பார்க்கும்போது தெரியும் ஒரு விடயம், வேறு ஓர் இடத்தில் இருந்து பார்த்தால் வேறொன்றாக தெரியும். இடம் மாறு வதைப் பொறுத்து சம்பவத்தின் முடிவும் மாறுபட்டு தெரியும் - இது வான்டேஜ் கோட்பாடு.

நாம் தொடங்கும் ஒவ்வொரு சிறு செயலும் அடுத்தடுத்து மற்றவர்களின் செயல்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் - இது வண்ணத்துப்பூச்சி விளைவு.

இந்த இரண்டு கோட்பாடுகளையும் வைத்து தனித் தனி கதைகளை எழுதி, கடைசியில் ஆறு கதைகளும் எப்படி ஒன்றுக்கொன்று தொடர்புக்குள்ளாகி வருகிறன என அருமையான திரைக்கதையை அமைத்துள்ளார் இயக்குநர் சிம்புதேவன்.

'கவசம், சதியாடல், தப்பாட்டம், பந்தயம், அறம் பற்ற, அக்கறை' இந்த ஆறு கதைகள்தான் இந்த கசடதபற.

ஒவ்வொரு தனிக்கதை முடியும் போதும் நாம் எதிர்பார்க்காத ஒரு திருப்புமுனை வருகிறது. அது தான் இந்த ஆறு கதைகளையும் தூக்கி நிறுத்துகிறது.

இப்படத்தை ஒரு தொகுப்பு கதை படம் என்றும் சொல்லலாம். இதுவரை வெளிவந்த தொகுப்பு கதை படங்களை எல்லாம் விஞ்சும் அளவுக்கு அற்புதமான கதை, திரைக்கதை, சுவாரசிய முடிச்சு என பரபரப்புடன் படத்தை நகர்த்தி இருக்கிறார்கள்.

ஆறு கதைகளிலும் யார் சிறப்பாக நடித்திருக்கிறார்கள் என்று சொன்னால், முதல் கதையில் வரும் பிரேம்ஜி, ரெஜினா ஆகிய இருவரைத்தான் சொல்ல வேண்டும். அந்த அளவிற்கு அந்தக் கதையிலும், அவர்களின் நடிப்பிலும் ஒரு ஜீவன் இருக்கிறது.

'என்கவுண்டர் ஸ்பெஷலிஸ்ட்' சந்தீப் கிஷன் அதிரடி காட்சிகளில் அமர்க்களம் காட்டுகிறார். 'அக்மார்க்' அயோக்கியத்தனத்தில் ஹரிஷ் கல்யாண் ஆச்சரியமூட்டுகிறார். நாற்காலி மீதான வெறியில் ஒரு மகன் இப்படிக்கூட நடந்து கொள்வாரா என சாந்தனு அதிர வைக்கிறார். இவரைவிட ஓர் அப்பாவி இந்த உலகத்தில் இல்லை என வெங்கட் பிரபு வியக்க வைக்கிறார்.

சந்தீப் கிஷன் மனைவியாக பிரியா பவானி சங்கர் சில நிமிடங்கள் வந்து சில வசனம் பேசுகிறார். அவருக்கு அதிக வேலையில்லை.

'அறை எண் 305ல் கடவுள்', 'சதுரங்க வேட்டை' உள்ளிட்ட சில பல படங்களை சில கதைகள் ஞாபகப் படுத்துகின்றன.

ஆறு ஒளிப்பதிவாளர்கள், ஆறு இசையமைப்பாளர்கள், ஆறு எடிட்டர்கள் என ஒவ்வொருவரும் அவரவர் பெயரை முத்திரை பதிக்க உழைத்திருக்கிறார்கள். சில கதைகளில் சில பாடல்கள் வந்து செல்கின்றன, ஆனால், மனதில் பதியவில்லை.

முதல் கதையில் ஆரம்பமாகும் ஒரு சுவாரசியம், விறுவிறுப்பு போகப் போக இன்னும் அதிகமாக வேண்டும். ஆனால், இடையிடையில் வேகத் தடை போல சில சினிமாத்தனமான காட்சிகள் வந்து அதைத் தடுத்து விடுகிறன.

இசை கலவை அளவிலும் கவனம் செலுத்துவது நல்லது. பல காட்சிகளில் வசனம் புரியவேயில்லை. பின்னணி இசை திடீர்திடீரென ஏறுகிறது, இறங்குகிறது. தொகுப்பு படங்களுக்கு கசடதபற நிச்சயம் ஒரு மாற்றத்தைக் கொடுக்கும். புதிய முயற்சிகளை மனமார வரவேற்போம்.

கசடதபற - ரசிக்க வைக்கிறது.

ஒரே நேரத்தில் நான்கு பெரிய நட்சத்திர நடிகர்களின் திரைப்படங்கள் வெளியீட்டுக்கு வரவுள்ளன. இவை ஒவ்வொன்றும் கிட்டத்தட்ட நிறைவு கட்டத்துக்கு அண்மையாக உள்ளன.

இந்த நிலையில், ரஜினிகாந்த் நடிக்கும் அண்ணாத்த திரைப்படம் தீபாவளி வெளியீடாக நவம்பர் 4ஆம் திகதி வெளியாகவுள்ளது. இதைத் தொடந்து பொங்கல் வெளியீடாக விஜயின் பீஸ்ட் திரைப்படமும் வெளியாகவுள்ளன.


இதேபோன்று, சூரியாவின் எதற்கும் துணிந்தவன் டிசம்பர் 24 ஆம் திகதியும், தனுஷின் திருச்சிற்றம்பலம் காதலர் தினமான பெப்ரவரி 14 ஆம் திகதி வெளியாகும் ஒன்று நான்கு படங்களையும் தயாரிக்கும் ஒரே நிறுவனமான சன் பிக்சர்ஸ் குழுமம் அறிவித்துள்ளது.



பொலிவூட்டின் முன்னணி நாயகியான தீபிகா படுகோன் ட்ரிபிள் எக்ஸ் - 3 படம் மூலம் 2017இல் ஹொலிவூட்டில் அறிமுகமானார். இந்தப் படத்தில் அவருக்கு பெரும் வரவேற்பு கிடைத்தது.

இந்த நிலையில், தற்போது அவர் மீண்டும் ஒரு ஹொலிவூட் படத்தில் நடிக்கவுள்ளார். இரு வெவ்வேறு நாடுகளை சேர்ந்தவர்களின் காதலை மையப்படுத்தியதே படத்தின் கதை.

இந்தப் படத்தை தீபிகாவின் தயாரிப்பு நிறுவனமும் இணைந்து தயாரிக்கவுள்ளது.





தென்னிந்திய திரையுலகில் சமீபத்தைய பரபரப்புக்கு சொந்தக்காரரர் சமந்தா. இவரை சுற்றி பல சர்ச்சை கள் சுழன்றாலும் எதையும் அவர் கண்டுகொள்ளவில்லை.

இந்த நிலையில், சில தினங்களுக்கு முன்னர் தனது நண்பியுடன் சுற்றுலா சென்ற அவர் இயற்கை காட்சிகள் நிறைந்த பகுதிகளில் படங்களை எடுத்து சமூகவலைதளத்தை நிரப்பினார்.

தற்போது கவர்ச்சி உடையில் போட்டோ சூட் நடத்தியுள்ளார் சமந்தா. இந்தப் படங்கள்தான் இப்போது சமூகவலைதளங்களில் பிரபலம்.



# நல்லை கந்தன் தேரேறும் திருக்காட்சியை மறக்க முடியுமா?

சரித்திரப் பிரசித்திபெற்ற அலங்காரக் கந்தனாகத் தமிழ் மண்ணாம் யாழ்ப்பாணத்தில் நல்யைம்பதியில் பன்னெடுங்காலமாக அருளாட்சி செய்து வருகிறான். நல்லைக் கந்தனின் தேர்த்திருவிழா இன்றாகும்.

**ஈழத்தில் முருகன் ஆலயங்கள்**

தமிழ்த் தெய்வமாம் முருகனுக்கு தமிழ் மக்கள் வதியும் இடமெல்லாம் கோவில்கள் எழுந்துள்ளன. முருகனுக்கும் தமிழருக்கும் இடையிலுள்ள தொடர்பு வரலாற்றுக்கும் அப்பாற்பட்டது எனலாம். ஈழத்திலே கருணைக்கடலாகிய முருகன் கதிர்காமத்திலும், நல்லூர், செல்வச்சந்திநிதி, மாவிட்டபுரம், கந்தவனக் கடவை, மண்டூர், சித்தாண்டி, வெருகல் முதலிய புண்ணிய தலங்களிலும் கோயில் கொண்டு அருள்பாலித்து வருகின்றான்.

யாழ்ப்பாண மண்ணிலே சைவத் தமிழ் மரபின் குன்றாக விளங்குவது நல்லூர். பண்டைத் தமிழ் மன்னர்களின் இராசதானியாக இது போற்றப்படுகின்றது. சைவமக்களும் சைவமன்னர்களும் வணங்கிய கீர்த்தி வாய்ந்த முருகன் ஆலயமாக சிறப்புப் பெற்று நல்லூர் விளங்குகின்றது.

**நல்லூர்**

தமிழ் நாட்டை ஆண்ட அரசர்கள் பலர் தத்தமது பெயர் விளங்குமாறு பல நல்லூர்களை உருவாக்கினார்கள். பாண்டிய நாட்டில் வீரபாண்டிய நல்லூர், அரசகேசரி நல்லூர், மானாபரண நல்லூர், செய்துங்க நல்லூர், முதலிய ஊர்கள் பாண்டிய குலத்தைச் சேர்ந்த மன்னர்களது பெயர்களாக விளங்குகின்றன.

சோழநாட்டில் பெருஞ்சோழ மன்னர்கள் உண்டாக்கிய நல்லூர்களைச் சாசனங்களில் காணலாம். முடிகொண்ட நல்லூர், அநபாய நல்லூர், திருநீற்றுச் சோழ நல்லூர், திருத்தொண்டர் தொகை நல்லூர், சிவபாதசேகர நல்லூர், கலிகடிந்த நல்லூர் முதலிய நல்லூர்கள் சோழ மன்னருடைய விருதுப் பெயர் பெற்ற பதிகளாகும்.

ஈழத்திலும் நல்லூர் எனப் பெயருடைய கிராமங்கள் பலவுள்ளன. பூநகரியிலும் குருநாகல் பதியிலும் களுத்துறையிலும் உள்ளனவாம். இத்தகு நல்லூர் என்ற பெயர் பல கிராமங்களுக்குச் சூட்டப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாண நல்லூரை எண்ணுகின்ற பொழுது அங்கே நல்லைக் கந்தன் ஆலயம்தான் எமது மனங்கண் முன்னே தோன்றுகின்றது.

“வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் வாரி
குளித்த வேல் கொன்றைவேல் சூர்மார்புல – குன்றும்
துளைத்த வேல் உண்டேதுணை”

**வேல்**

முருகனுடைய கையிலே இருப்பது வேல், இது ஞானசக்தி வேலாகும். அஞ்ஞானப் பகையை வெல்ல ஞானவேல் தாங்கியுள்ளவன் முருகன், தனி வழி நடக்கும் பக்தர்களுக்கும் வலப்புறத்தும், இடப்புறத்தும் முன்னும் பின்னும் எங்குமாகி இரவு பகலில் துணையாக விளங்குவது வேல் என்கிறார் அருணகிரிநாதர்.

அச்சம் அகற்றும் அயில் வேல் என்கிறார் குமரகுருபரர். எங்களுக்கு ஒப்பற்ற துணையாக விளங்குவது வேல். அந்த வேலை வணங்குவதே எமக்கெல்லாம் வேலை. வெற்றி வேலினால் துன்பம் துடைக்கப்பெற்ற நக்கீரர் –

குன்றம் எறிந்ததுவும் குற்றப் போர் செய்ததுவும்
மன்னங் அமரர் இடம் தீர்த்ததுவும் நின்றென்னை
கைவிடாது நின்றதுவும் கற்பொதுவும் பிற்காதது
மெய்வீடா வீரன் கைவேல்

என்கிறார். இத்தகு வரலாற்றுப் பெருமையைத் தன்னகத்தே கொண்ட வெற்றி வேலே நல்லூர் கந்தசுவாமி கோயில் மூலஸ்தானத்தில் உள்ளது.

**தேரேறும் ஆறுமுகப் பெருமான் அருள் நலம்**

சிவபெருமானுடைய ஐந்து முகமும் உமாதேவியாரின் ஒரு முகமும் சேர்ந்து சிவனும் சக்தியும் கலந்த ஒரு திருவுருவமாக ஆறுமுகப் பெருமான் தோன்றியுள்ளான் என்பது ஒன்று.

இறைவன் தன்னுடைய ஐந்து முகங்களையும் அதேமுகத்தையும் சேர்த்து ஆறுமுக நாதனாக திரு அவதாரம் செய்தார் என்பது மற்றொன்று, நான்கு திசையும், மேல் கீழ் என்ற இரண்டும் ஆக ஆறு இடங்களிலும் எம்பெருமான் திருவருட்பார்வை செல்கின்றது என்பதை அவனுடைய ஆறுமுகங்களும் எமக்கு அறிவிக்கின்றன.

**தேரின் மகிமை**

உற்சவம் இறைவனது ஐந்தொழில் தத்துவத்தை உள்ளடக்கியுள்ளன. படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைதல் ஆகிய ஐந்தொழில்களின் உண்மைகளைப் புலப்படுத்தி நிற்பது மகா உற்சவமாகும். இத்தகு மகத்துவமான பிலவ வருஷத்தில் மஹோற்சவப் பெருவிழா நல்லைக் கந்தனுடைய ஆலயத்திலும் அமைதியான முறையில் நடைபெற்று வருகின்றன.

**ஓம் தொலைக்காட்சியில் தரிசனம்**

25 நாள் மஹோற்சவங்களையும் ஓம் தொலைக்காட்சி உலகம் முழுதும் ஒளிபரப்பி உன்னதமான முதற்தர சேவையை வழங்குகின்றது. உலக நாடுகள் யாவும் நல்லைக் கந்தனின் தரிசனத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. எல்லாம் வல்ல நல்லைக் கந்தன் எழிலார்ந்த தேசத்தை வாழ்விக்க வேண்டும். கொரோனா வைரஸ் இந்த குவலயத்தை விட்டேக என்றும் நல்லைக் கந்தனின் துணை நமக்கு வேண்டும்.

வெற்றிவேல் முருகனுக்கு அரோஹரா.

**- மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்**

**நல்லூர்க் கந்தன் தேர் உற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்**

Astra

CBL Munchee
சுப்பர் கிறீம் கிறக்கர்

CBL Munchee
சொக்லட் கிறீம் - பிஸ்கட்

SINCE 1948
CYCLE BRAND
SYMBOL OF QUALITY
இது நம்பிக்கையின் நறுமணம்

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

SINGER

SLIC
ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்

SLTMOBITEL
4G LTE
FASTEST INTERNET
WIDEST COVERAGE



# யாழ்ப்பாணத்து தவில் நாதஸ்வர பாரம்பரியமும் தெட்சணாமூர்த்தியும்

**ஆறுமுகம் முத்துக்கிருஷ்ணன்**
**(கனடா)**

ஆமாம், காலத்தால் அழியாத, அணையாத ஜோதி, தெட்சணாமுர்த்தி. எங்கே கண்டாலும், அன்புடன் 'குஞ்சு மச்சான் வா' என அழைத்துத் தன் பக்கத்தில் அமர வைத்துக் கதைப்பார். அந்த வித்துவான் பக்கத்தில் இருப்பதையே நான் பெருமிதமாகக் கருதிய காலம் உண்டு. தான் ஒரு பெரிய வித்துவான் என்ற கர்வம் ஒருபோதும் அவர் காட்டினதும் இல்லை, கண்டதும் இல்லை. எனது இளம் வயதில் அவரைப் பல கச்சேரி மேடைகளில் பார்த்து ரசிக்கும் வாய்ப்புக் கிட்டியதை நினைத்தால் இன்றும் மகிழ்ச்சியாக உள்ளது. கச்சேரி மேடைகளில் அவர் அமர்ந்திருக்கும் அழகே ஒரு தனி அழகு. புன்சிரிப்புடன் வாசிக்கும் அழகு இன்னொன்று. உடல் ஆட்டம், தலை அசைவு எதுவுமின்றி, இரண்டு கைகள் மட்டுமே வாசிப்பில் ஈடுபடும் அழகு, மற்றொரு தனித்துவமான அழகு. மணித்தியாலக் கணக்கில் கோர்வை கோர்வையாய், பல நடைகளில் வாசிப்பதுகேட்டு, இன்றும் புல்லரிக்கும் உணர்வு வருகின்றது.

எங்கள் குடும்பம் மூளாயில் தவில் வித்துவான் வை. ஆறுமுகம்பிள்ளை என்ற பெயரில் வேரூன்றிய விருட்சம். அதில், தவில் சக்கரவர்த்தி வலங்கைமான் ஆ. சண்முகசுந்தரம், மிருதங்க வித்துவான் 'கலாபூஷணம்' ஆ. சந்தான கிருஷ்ணன், நாதஸ்வர வித்துவான் 'இன்னிசை வேந்தன்' கோண்டாவில் ஆ. பாலகிருஷ்ணன் ஆகியோர் பிரபல்யமாகத் திகழ்ந்தார்கள். அதேபோன்று, இணுவிலில் விசுவலிங்கம் குடும்பம் இன்னொரு விருட்சமாக உருவானது. அதில் மலர்ந்தவர்களே நாதஸ்வர, வயலின் வித்துவான் வி. உருத்திராபதி, அவர் மகன் வயலின் மேதை உ. ராதா கிருஷ்ணன், நாதஸ்வர வித்துவான் வி. கோதண்டபாணி. இவரின் வாரிசுகள்தான் உலகத்தையே தங்கள் இசையால் கவர்ந்த நாதஸ்வர வித்துவான்கள் கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரர்களும், நாதஸ்வர இளவரசன் கே. பி. குமரனும் ஆவர்.

வி. மாசிலாமணி ஒரு சகலகலா வல்லவர் என கூறினாலும் மிகையாகாது. பிரபல்யமான நாடக நடிகர், வாய்ப் பாட்டு (வானொலி கலைஞர்). நாதஸ்வரம், தவில் என்பன இவருக்குக் கைவந்த கலை. இவருக்குப் பின்னால் வந்தவர்தான் தெட்சணானமூர்த்தி.

இந்த இரண்டு குடும்பங்களுக்குமிடையே கல்யாணங்கள் பாலமாய் அமைத்தன. அதாவது, கோதண்டபாணியும், மாசிலாமணியும் ஆறுமுகம் பிள்ளையின் மூத்த இரண்டு மகள்மாரை மணமுடித்தனர். இரண்டு புகழ்பெற்ற பரம்பரையும் ஒன்றுசேர்ந்து, சங்கீதத்தில் சங்கமம் ஆனது. இவ்வேளை, இதே பரம்பரையில் வந்த தவில், நாதஸ்வர வித்துவான்கள் சு. சுந்தரமூர்த்தி,. சு. புண்ணியமூர்த்தி, ஏ. கருணாமூர்த்தி ஆகியோரையும் இங்கே குறிப்பிடவேண்டும்.

1950களில் பாடசாலை காலங்களில் இந்தியாவிலிருந்து கலைஞர்கள் யாழ்ப்பாணம் வருவது வழக்கம். அப்பொழுதெல்லாம் திருவிழாக்களில் 'தவில் சமா' என்றால் வலங்கைமான் சண்முகசுந்தரம்பிள்ளை, முத்துவீர் பிள்ளை, ராமதாசுபிள்ளை, கும்பகோணம் தங்கவேல்பிள்ளை என்ற இந்த நான்கு வித்துவான்களின் வாசிப்பை ரசிக்க சனத்திரள் அலை மோதும். நிகழ்ச்சியும் மறக்கமுடியாத அளவுக்குக் குதூகலமாகவும் இருக்கும். நீடாமங்கலம் சண்முகவடிவேல், கோடையிடி பரமசிவம் போன்றவர்களையும் இவ்வேளை மறக்கமுடியாது. பிற்காலங்களில், இந்திய கலைஞர்கள் யாழ். வருவது நின்றுபோகவே, எமது உள்நாட்டுக் கலைஞர்களான, மும்மூர்த்திகள் வி. தெட்சணாமூர்த்தி, என்.ஆர். சின்னராசாவுடன் கே. கணேசபிள்ளையின் தவில் கச்சேரியை கேட்பதற்கும் மக்கள் கூட்டம் கூட்டமாகத் திரண்டுவருவார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தக் காலகட்டத்தில் வாசித்த நாதஸ்வர வித்துவான்களையும் நினைவுகூராமல் இருக்க முடியாது. அளவெட்டி நாதஸ்வர வித்துவான் என். கே. பத்மநாதன் இணுவில் என். ஆர். கோவிந்தசாமி, சீர்காழி எஸ். பி. எம். திருநாவுக்கரசு, கலாநிதி எம். பஞ்சாபிகேசன், யாழ். பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை ஆகியோர் தங்கள் இன்னிசையால் பாமர மக்களைக் கவர்ந்தவர்கள் என சொல்லலாம். அதன்பின் வந்தவர்களே இளங் கலைஞர்களான கோண்டாவில் கி. பாலகிருஷ்ணன் எம். பி. நாகேந்திரம், வி. கே. கானமூர்த்தி, வி. கே. பஞ்சமூர்த்தி சகோதரர்கள், எஸ். சிதம்பரநாதன் (நேற்றுமுன்தினம் காலமானார்) மற்றும் எம். பி. பாலகிருஷ்ணன் போன்ற வித்துவான்கள்.

கடைசியாக தெட்சணாமூர்த்தியின் கச்சேரியை பார்த்தது, 1960களில் கொழும்பு ஆடி வேல் விழாவிலும், யாழ். புத்தூர் கோவில் திருவிழாவிலுமாகும். வேல் விழாவில் இந்தியாவிலிருந்து வருகைதந்த நாதஸ்வர மேதை ஷேக். சின்னமௌலானாவுக்குச் சிறப்புத் தவிலாக வாசிக்க வந்து ரசிகர்கள் அனைவரையும் இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தினார் என்றால் அது மிகையாகாது. இவ்வேளை, நான் கேள்விப்பட்ட ஒரு செய்தியைப் பகிர்ந்துகொள்ளலாமென நினைக்கிறேன். ஆடி வேலுக்கு ஒழுங்குசெய்ய அவரைச் சந்திக்க, திருவிழாக்காரர்கள் அவர் வீட்டுக்குச் சென்றுள்ளனர். சம்பளம் பேசும் விஷயத்துக்கு வந்தபோது, தெட்சணாமூர்த்தி 10,000 ரூபாய் கேட்டதையிட்டு கொஞ்சம் மிரண்டுபோய், குறைக்கச் சொல்லிக்கேட்டனர். அதற்கு தெட்சணாமூர்த்தி, 2,000 ரூபாய் கூட்டிக் கேட்டார். திரும்பவும் திருவிழாக்காரர்கள் என்ன, இப்படிக் கேட்கிறீர்கள் என்று தடுமாறும்போது தெட்சணாமூர்த்தி, எனக்கு கொழும்புக்குப் போக வர பிளேன் ரிக்கற்றுடன் 15,000 ரூபாய் தந்தால்தான் வருவேன் என்றார். கடைசியில் வேறுவழியின்றி அவரை 'புக்' பண்ணி, செல்லவேண்டியதாயிற்று. இது உண்மையாக நடந்திருக்கலாம் என நிச்சயம் நம்பலாம்.

தெட்சணாமூர்த்தி செய்த இன்னொரு சாதனை பலருக்குத் தெரியாமலிருக்கலாம். நான் யாழில் 1955, 60களில் படித்துக்கொண்டிருந்த சமயம் அது. அப்போது காங்கேசன்துறை வீதியால், சான்டோ முத்துசாமிபிள்ளையும், வண்ணை சிவன் கோவில் முதலாளியின் மகனும் பெரிய குதிரையில் சவாரிசெய்வார்கள். அது ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இவ்வாறு வேடிக்கை பார்க்கும் நாள்களில் அவ்வழியால் ஒரு புதுமாதிரியான மனிதர் காட்சியளித்தார். முழுநீளக் கால்சட்டை அணிந்து, கண்ணில்



'கூலிங்' கண்ணாடி, கையில் சிகரட் பிடித்தபடி மிகவும் கம்பீரமாகப் பவனி சென்றார். அது, வேறு யாருமில்லை; சாட்சாத் தெட்சணாமூர்த்தி. இதே தோற்றத்தில் அவர் மோட்டார் சைக்கிளிலும் சவாரி செய்வார். இது ஒரு சாதனையாகவே மனதில் பதிந்துவிட்டது. ஏனென்றால், அந்தக் காலகட்டத்தில் வேறு எந்த இசைத் தொழிலாளரும் செய்திராத ஒரு புதுமையான காரியம். அஞ்சா நெஞ்சன் என்று சொல்லத் தோன்றுகின்றது.

ஓர் உலக அதிசயமாக திகழ்ந்து, தெட்சணாமூர்த்தி அவரின் 42ஆவது வயதில் 1975இல் மறைந்தார். ■

# கி.ரா. விருது பெறுகின்றார் கோணங்கி



கிரா விருது இந்த ஆண்டு தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் கோணங்கிக்கு வழங்கப்பட உள்ளது.

சென்னயிலுள்ள விஜயா பதிப்பகத்தின் வாசகர் வட்டத்தின் சார்பாக ஒவ்வொரு வருடமும் கி.ரா. விருது வழங்கப்பட்டு வருகிறது. கரிசல் இலக்கியத்தின் தந்தை எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் பெயரில் சிறந்த படைப்பாளாருக்கு கி.ரா. விருதும், மேலும், விருதுடன் ரூ.5 லட்சம் (இந்திய ரூபாவில்) பரிசு தொகையும் வழங்கப்படுகிறது.

இந்நிலையில், பிரபல எழுத்தாளர் கோணங்கிக்கு நடப்பு ஆண்டுக்கான கி.ரா.விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த கி.ரா. விருதை சக்தி மசாலா நிறுவனம் வழங்குகிறது.

இந்த விருது செப்ரெம்பர் 19ஆம் திகதியன்று நடைபெறும் விழாவில் அவருக்கு வழங்கப்படவுள்ளது.

சுதந்திரப் போராட்ட வீரரான மதுரகவி பாஸ்கர தாஸ் பேரன்தான் எழுத்தாளர் கோணங்கி. இவரின் அப்பா சண்முகம், அண்ணன் ச. தமிழ்ச்செல்வன் ஆகியோரும் எழுத்தாளர்கள் ஆவர்.

கோவில்பட்டியில் வசிக்கும் கோணங்கி 1958 ஆம் ஆண்டு நென்மேனி எனும் கிராமத்தில் பிறந்தார். புதுமைப்பித்தன், மௌனி, நகுலன், ந.முத்துச்சாமி, கி.ராஜநாராயணன் போன்ற தமிழ் இலக்கியவாதிகளால் கவரப்பட்ட இவர் கடந்த 1980 ஆண்டு முதல் தனது எழுத்து பயணத்தை துவங்கினார்

அந்த வகையில் மதினிமார்கள் கதை, கொல்லனின் ஆறு பெண்மக்கள், பொம்மைகள் உடைபடும் நகரம், பாழி, நீர்வளரி, த உள்ளிட்ட படைப்புகள் இவரது பெயர் சொல்லும். இதில் சில நாவல்களும், சில சிறுகதை தொகுப்புகளும் அடங்கும். இவருடைய பாழி, பிதிரா, த, நீர்வளரி என்ற நான்கு நாவல்களும் மிக அதிக அளவில் மக்களால் கவரப்படவை என்பது குறிப்பிடத்தக்கது



# பறவைகள்

மாலினி அரவிந்தன்

அந்த ஏரி பனியால் மூடியிருந்தது. மாலதியும் ஹரியும் தமது நண்பர்களுடன் பனியில் சறுக்கி விளையாடுவதற்காக ஏரிக்கரைக்கு வந்திருந்தனர். இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒருநாள் ஹரியோடு கைகோத்து இந்த ஏரிக்கரை நீரில் கால் நனைய நடந்த ஞாபகம் அவளுக்கு வந்தது. இன்று நீரை மூடிப் படர்ந்திருக்கும் பனியைப் பார்க்க, எவ்வளவு வேகமாக இந்த மண்ணில் எல்லாம் மூடிமறைக்கப் பட்டுவிடுகின்றன என்பதை நினைக்க அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

பறவைகளின் கூக்குரல் கேட்டு அண்ணார்ந்து பார்த்தாள். வெள்ளை நிற சீ-ஹல் பறவைகள் ஏரிக்கரையில் இரைதேடி வானத்தில் பதிவாக அங்குமிங்கும் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. இடையிடையே அவை கூக்குரலிட்டு, காகங்கள் போல தமக்குக் கிடைத்த இரையைப் பங்குபோட்டுக் கொண்டிருந்தன.

நண்பர்கள் எல்லாரும் வட்டமாக பனியில் சறுக்கி விளையாடிக் கெண்டு இருந்தனர். உற்சாக மிகுதியால் மாலதியும் ஹரியும் கைகோத்தபடி தங்களை மறந்து, நண்பர்களை விட்டு தனியாக ஏரியின் நடுப்பகுதியை நோக்கிச் சறுக்கத் தொடங்கினர். இவர்கள் ஏரியின் நடுப்பகுதியை நோக்கி சறுக்கிச் செல்வதை இவர்களுக்குப் பின்னால் சறுக்கிக் கொண்டு வந்த மாலதியின் சினேகிதி சிமி அவதானித்தாள்.

“மாலதி கவனம், அந்தப் பக்கம் போகவேண்டாம். பனிக்கட்டியில் வெடிப்பு ஏதாவது இருந்தல் ஏரி அப்படியே உங்களை விழுங்கி விடும், புரியுதா?” என்று சத்தம் போட்டு எச்சரித்தாள்.

“பரவாயில்லை, இரண்டு பேரும் சேர்ந்தே போயிடுவோம்!” என்றான் ஹரி.

“பாவி நீ போனால் பரவாயில்லை, அதுக்காக அவளையுமெல்லே இழுத்துக் கொண்டு போய் படுகுழியில் விழுத்தப் பாக்கிறாய்..!” பயந்துபோன சிமி அவனைத் திட்டித் தீர்த்தாள்.

இந்த ஏரிக்கரைக்கு வரும்போதெல்லாம் மாலதிக்கு ஊர் ஞாபகம் வரும். சின்ன வயதில் கீரிமலைக் கடற்கரை மணலில் நண்டு பிடித்தது, மணல்வீடு கட்டியது, கடலலையில் கால்நனைக்கப்போய் பட்டுப் பாவாடையை உப்புத் தண்ணீரில் நனைத்ததற்காக அம்மாவிடம் ஏச்சு வாங்கியது, கரையோரத்தில் இரைதேடி வட்டமிடும் காகங்களை விரட்டப்போய் கொத்து வாங்கியது, அங்கே கறுப்புக் காகம், இங்கே வெள்ளை சீ-ஹல்! இரண்டுமே இரை தேடித்தான் வட்டமிடுகின்றன. என்ன நிறமாய் இருந்தாலென்ன, உயரப் பறந்தாலென்ன, இவைகளின் நோக்கம் எல்லாம் ஒன்றாய்த்தான் இருக்குமோ?

அவ்வப்போது வந்து போகும், மனதைத் தொட்டுத் தாலாட்டும் எத்தனையோ நினைவுகள்! கடலலையில் கரைந்து போகும் மணல் வீடு போல மெல்ல மெல்ல அவளைவிட்டு, புதியமண் வாசனையில் கரைந்து போகும் கடந்தகால பழைய நினைவுகள்.

மாலதி கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். ஏழு மணியானாலும் வானம் வெளிச்சுக் கிடந்தது. வீட்டு நினைவுவரவே செல்போனில் தாயுடன் தொடர்பு கொண்டாள்.

தெலைபேசி கிணுகிணுக்க மரகதம் சலிப்புடன் எடுத்து ‘ஹலோ’ என்றாள்.

‘அம்மா நான் ஹரியுடன் வெளியால போறன் நான் வர கொஞ்ச நேரமாகும் நீங்களும் அப்பா வும் சாப்பிட்டு படுங்கோ என்ன, என்னட்ட திறப்பு இருக்கு.’

‘சரி மாலதி’ என்று சொல்லிவிட்டு தொலைபேசியை வைத்த மரகதத்தால் மாலதியின் போக்கை புரிந்துகௌ்ளமுடியவில்லை.

இந்த நாட்டில் பிள்ளைகளுக்கு இருக்கும் அளவுக்கு அதிகமான சுதந்திரத்தால், எதையும் மறுத்துப் பேசமுடியாத பெற்றோர்கள். பெற்றதாயின் வாயையும் கட்டிப்போடும் இந்தச் சுதந்திரம் யாருக்கு வேணும்?

“மாலதி படித்து பட்டம் பெற்று இப்போ நல்ல வேலையும் கிடைத்தாகி விட்டது. இனி எமது சொல்வழி கேட்கவா போகிறாள்.’ மனதுக்குள் புழுங்கினாள் மரகதம்.

இனம், மதம், மொழி, கலாசாரம் எல்லாவற்றிலும் மாறுபட்ட ஒருவனை துணையாகத் தேடும் மகளை நினைக்க, இந்த நாட்டிற்குப் புலம் பெயர்ந்ததே தப்போ என்று எண்ணத் தோன்றி யது. ஹரி ஹரி என்று ஏன்தான் இவள் அவன் மேல் உயிரைவிடுகிறாளோ?

வீட்டு மணி ‘டிங் டொங்’ என அடித்தது. யாராக இருக்கும் என்று நினைத்துக்கெண்டு மரகதம் கதவைதிறந்து பார்த்தாள். தம்பி கணேசன் வாசலில் நின்றான்.

‘வா வா கணேசு, என்ன சொல்லாமல் வந்திருக்கிறாய்?’

பொதுவாக யார் வருவதாக இருந்தாலும் இங்கே தொலைபேசியில் அழைத்து சொல்லி விட்டுத்தான் வருவது வழக்கம்.

மரகதத்தின் கணவரும் அழைப்பு மணிச் சத்தம் கேட்டு கீழே இறங்கி வந்தார். உள்ளே வந்து உட் கார்ந்த கணேசு எதையோ சொல்லத் தயங்குவது போல இருந்தது.

‘என்ன கணேசு என்ன விஷயம்?’

‘இல்லை அக்கா, நான் நேர விசயத்திற்கு வாறன். அத்தான் நீங்களும் கேளுங்கோ, என்ர மகள் சுமதி சொன்னவள் மாலதியை ஒரு வெள்ளைப் பெடியனோட அடிக்கடி டவுன்டவுணில் காணுறவாவாம். அதுதான் உங்களிட்ட கவனம் என்று செல்லிட்டு போக வந்தனான்.’

‘எங்களுக்கும் தெரியும் கணேசு. வெள்ளம் தலைக்கு மேல போயிற்றுது. மாலதி ஹரி எண்ட பெடியனோட டேட் பண்ணிறாவாம். அனேகமாக ஹிரியை தானாம் கலியாணம் செய்ய பேகிறாள். நாங்கள் என்ன செய்யிறது? இப்ப இது ஊராய் இருத்தால் மாலதி இவ்வளவு துணிவாய் தாய் தகப்பனோட கதைக்க முடியுமா? இது கனடா எங்களுக்கு கதைக்கிறதுக்கு ஒரு உரிமை யும் இல்லையாம், அதைவிட போன சனிக் கிழமை ஹரியையும் கூட்டிக்கெண்டு வீட்டிற் கெல்லே வந்தவா.’

‘என்னக்கா சொல்லுறியள்..? பெடியனை வீட்டை கூட்டிக் கொண்டு வந்திட்டாளே?’

‘ஓம், வீட்டை கூட்டிக் கொண்டு வந்தநேரம் நல்லகாலம் மூத்தவன் மோகனும் ஒட்டாவாவில இருந்து வந்து இருந்தவன். மோகனுக்கும் முதல்ல சாடையாக தெரியும் போல இருக்கு. அவனும் எவ்வளவே புத்திமதி சொல்லிப் பாத்திட்டான். அவள் கேட்கிறாள் இல்லை.’

“இந்தக் காலத்துப் பிள்ளையள் இப்படித்தானக்கா... இஞ்சை வந்து அதுகள் படுகிறபாடு.. வீட்டுக்கு வீடு வாசற்படி..!” கணேசு ஆறுதல் சொல்லிப் பார்த்தான்.

“தகப்பனும் இதைக் கேள்விப்பட்டதிலை இருந்து ஒரேயடியாய் உடைஞ்சு போயிட்டார். அவமானம் என்று சொல்லி அறைக்கு வெளியாலை வாறாரில்லை“ என்று கணேசிடம் செல்லி மரகதம் அழத்தொடங்கினாள்.

“நாங்கள் இலங்கையிலை எவ்வளவு சந்தோசமாக இருந்தநாங்கள். இவரும் அரசாங்க உத்தியோகம்தானே, நல்ல பதவியில இருந்தவர். தெகிவலையில வீடும் வேண்டிட்டம். யாழ்ப்பாணத்தில இருந்து எங்கட வீட்டிற்கு எவ்வளவு பேர் வந்து போவினம் தெரியுமே? எங்கட வீடு எப்பவும் உறவுகள், நட்புகள் என்று கலகலப்பாய்தான் இருக்கும். இந்த இனக்கலவரத்தால எல்லாம் அழிஞ்சு போச்சு. அதாலதானே நாங்கள் சொந்த மண்ணைவிட்டு புலம் பெயர்ந்து கனடா வந்தனாங்கள். இங்க வந்து நானும் இவரும் எவ்வளவு கஷ்டப்பட்டு பிள்ளையளை வளர்த்தநாங்கள். இப்பதான் பிள்ளையள் வளர்ந்து நல்ல வேலை யும் செய்யினம் என்று நிம்மதியாய் இருப்ப மெண்டு பாத்தால் இப்ப இவள் இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடுறாள்“ என்று தம்பியிடம் அழுதாள் மரகதம்.

“அக்கா இப்ப அழுது என்ன செய்யிறது அவசரப் படவேண்டாம். இன்னும் கெஞ்ச நாளைக்கு விட்டுப்பிடியுங்கோ. அவள் பழகிறமாதிரி ஹிரியுடன் பழகட்டும். கனடாவிலை இருக்கிற அநேகமான பிள்ளையள் தாங்களே தங்களுடைய வாழ்க்கைத் துணையைத் தேடிக் கொள்ள விரும்புகினம். வேறு இனத்தவர்கள் எல்லாரும் கூடாதவர்கள் என்று இல்லை. என்ன செய்யிறது எங்கட பிள்ளையள் இரண்டு கலாசாரத்திற்கும் இடையிலை அகப்பட்டுத் தத்தளிக்கிறதால எங்களுக்கும் அவர்களின் கஷ்டம் புரியிறது இல்ல. மாலதி ஒரு வரையறைக்கு உட்பட்டு ஹிரியுடன் பழகினால் அதிலை பிழையில்லை“ என்று ஆறுதல் வார்த்தை சொல்லி விடை பெற்று சென்றான் கணேசு.

தம்பி கணேசு வந்து விஷயத்தைச் சொல்லி விட்டுப்போக, ஊர் எல்லாம் தெரிஞ்சு போச்சே என்று மரகதத்திற்கு நெஞ்சு படபடத்தது. உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூடமுடியுமே? அதுவும் இலவச தொலைபேசி உள்ள இந்த மண்ணில..?

மாலதி வீட்டுக்கு வரும் வரைக்கும் மரகதத்திற்கு நித்திரை வரவில்லை.

திரைச் சீலையை விலக்கி வெளியில் எட்டிப் பார்த்தாள். வீடுகள், மரங்கள், வீதிகள் எல்லாம் பனிமூடி இருந்தது. இவ்வளவு பனிமழையைப் பொழிந்துவிட்டு வானம் ஒன்றும் நடக்காதது போலத் தெளிவாக இருந்தது. ஒன்றிரண்டு கார்கள் மாத்திரம் வீதியால் பேய்க் கெண்டு இருந்தன. மரகதமும் ஒரு முடிவுக்கு வந்து இருந்தாள். மாலதியின் திருமணம் அவளின் விருப்பப்படியே நடக்கட்டும். அவரவர் வாழ்க்கை அவர்களுக்கானது, பிள்ளைகளின் விருப்பத்திற்கு முக்கியத்துவம் கெடுக்காமல் இனம் சனம் என்ன சொல்லும் என்று மற்றவர்களுக்காக மகளின் மனதைக் கஷ்டப்படுத்த அவள் விரும்பவில்லை.

மாலதி பத்தரை மணியளவில் வீட்டிற்கு வந்தாள். அவளின் முகத்தில் ஒரு வாட்டம் தெரிந்தது. களைத்துப் போயிருக்கலாம் என்று நினைத்தாள்.

‘மாலதி சாப்பாட்டை சூடாக்கட்டா.’ என்றாள் மரகதம்.

‘எனக்குப் பசிக்கேல்லை, கொஞ்சமாக தாங்கோ அம்மா.’

தாயாரின் வற்புறுத்தலுக்காக சாப்பிட இருந்த மாலதி, சாப்பாட்டில் விருப்பம் இல்லாமல் அளைந்து கெண்டு இருந்தாள்.

‘மாலதி என்ன நடந்தது நீ ஏதே குழப்பத்தில இருக்கிறாய் போல் தெரியுது’. என்றாள் மரகதம்.

‘இல்லை அம்மா ஹரி நல்லவன்தான், ஆனால், சிலவேளைகளில் அவனுடைய போக்கு எனக்கு பிடிக்கவில்லை. அவன் மற்றைய பெண்களுடனும் மிகவும் அன்னியோன்யமாக பழகுகிறான். அதைத்தான் என்னால பொறுக்க முடியாமல் இருக்கு.’

அதற்கு தாயார் சென்னார், ‘பிள்ளை இதை பெரிசுபடுத்தாத, ஹரியிண்ட கலாசாரம் அப்படி. நீதான் சமாளிச்சுப் போகவேணும்.’

‘இல்லையம்மா, இண்டைக்கு நான் ஹரியின்ர வீட்ட போனனான்.’


அதைக்கேட்ட மரகதத்திற்கு திக்கெண்டது. என்றாலும் மகளிடம் காட்டிக்கெள்ளாமல்,

(16 ஆம் பக்கம் பார்க்க..)

# சங்க இலக்கியங்களை திராவிட களஞ்சியம் என்ற பெயரில் வெளியிட திட்டமா?

## தமிழக அரசியலில் புதிய சர்ச்சை

சங்க இலக்கியங்களைச் சந்தி பிரித்து, திராவிடக் களஞ்சியம் என்ற பெயரில் தமிழ்நாடு அரசு வெளியிடப்போவதாகக் கூறி எதிர்ப்பு எழுந்துள்ளது. இது குறித்து தமிழ்நாடு அரசு சொல்வது என்ன?




**முரளிதரன் காசிவிஸ்வநாதன்**

கடந்த ஒகஸ்ட் 31ஆம் திகதியன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் தமிழ் வளர்ச்சித் துறைக்கான மானியக் கோரிக்கைகள் விவாதிக்கப்பட்டன. இது தொடர்பான கொள்கை விளக்கக் குறிப்பும் வெளியிடப்பட்டது.

இதில், பல அறிஞர்களின் நூல்களை நாட்டுடமையாக்குவது, தமிழ் பரப்புரைக் கழகம் அமைப்பது உள்ளிட்ட அறிவிப்புகளோடு சங்க இலக்கியத்தை பரவலாக்குவதற்காக சந்தி பிரித்து, பதிப்புகள் வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

கொள்கை விளக்கக்குறிப்பில் பத்தாவது அறிவிப்பாக இடம் பெற்ற அந்த அறிவிப்பில், “சங்க இலக்கியங்களைச் சந்தி பிரித்து எளிமைப் பதிப்புகளாகவும் திராவிட களஞ்சியம் என்ற தொகுப்பு நூலையும் தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் தமிழ் பாடநூல் மற்றும் கல்வியியல் கழகத்தின் கூட்டு வெளியீடுகளாகக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக தொடராச் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்” எனக் கூறப்பட்டிருந்தது.

ஆனால், இந்த அறிவிப்பு வெளியானதிலிருந்தே தமிழ்த் தேசிய அமைப்புகள், கட்சிகள் இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தன. தமிழ் தேசியப் பேரியக்கத்தின் தலைவர் மணியரசன் இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். அதே போல நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

இது தொடர்பாக நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்ட அறிக்கையில், “தமிழ்நாடு சட்டப் பேரவையில் தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புகளில் தமிழ் நூல்களைத் தொகுத்து, அவற்றை “திராவிடக்களஞ்சியம்“என அடையாளப்படுத்தப்போவதாக அறிவித்திருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது. பெருமைமிக்கத் தொல்தமிழர் வரலாற்று அடையாளங்கள் யாவற்றையும் தன்வயப்படுத்தும் திராவிடத் திரிபுவாதிகள் தற்போது தமிழ் நூல்களின் மீதும் கைவைக்க முனைந்திருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது.

சங்க இலக்கியங்கள் என்றாலும் சரி, அதற்குப் பின்வந்த இலக்கியங்கள் என்றாலும் சரி எந்தவொரு தமிழ் நூல்களுக்கும் “திராவிட இலக்கியம்“ என்று பெயர்மாற்றம் செய்வதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அத்தகைய கொடுஞ்செயலை தமிழ் இளந்தலைமுறையினரும், இனமானத்தமிழர்களும் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள்” என்று தெரிவித்திருந்தார்.

சங்க இலக்கியங்களை சந்தி பிரித்து திராவிடக் களஞ்சியம் என்ற பெயரில் தமிழ்நாடு அரசு வெளியிடுவது ஏன் என தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசுவிடம் கேட்டபோது, அவை இரண்டும் வெவ்வேறு என விளக்கினார்.

“எல்லோரும் சங்க இலக்கியத் தொகுப்பையும் திராவிடக் களஞ்சியத்தையும் ஒன்றாகச் சேர்த்துக் குழப்பிக்கொள் கிறார்கள். பத்தாவது அறிவிப்பின்படி சங்க இலக்கியங்களை இந்த கால தலைமுறையினரும் புரிந்துகொள்ளும் வகையில் எளிதாக சந்தி பிரித்து செம்பதிப்புகளாக வெளியிடுவது என்பது ஓர் அறிவிப்பு. திராவிடக் களஞ்சியம் என்பது மற்றொரு அறிவிப்பு. இதில் திராவிடம் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள், கால்டுவெல் காலத்திலிருந்து தற்போது அஸ்கோ பர்ப்போலா, ஆர். பாலகிருஷ்ணன் வரையிலான ஆய்வறிஞர்களின் கட்டுரைகள், கருதுகோள்கள், இட ஒதுக்கீடு, இந்தி எதிர்ப்பு, சமூக நீதி போன்றவை குறித்த கட்டுரைகள் இதில் இடம் பெறும்.

மூன்றாவதாக, தொல்காப்பியம் முதல் முத்தொள்ளாயிரம் வரையிலான தமிழ் செவ்வியல் இலக்கிய நூல்கள் ஒரே தொகுப்பாக, ஒரே இடத்தில் கிடைக்க வகை செய்யப்படும். இதற்காக வருடந்தோறும் 10 இலட்ச ரூபாய் செலவிடப்படும். ஆகவே, எல்லாவற்றையும் ஒன்றாகக் குழப்பிக்கொள்ள வேண்டியதில்லை” என பிபிசியிடம் கூறினார் தங்கம் தென்னரசு.

ஆனால், இந்த விளக்கம் குறித்தும் தமிழ் தேசியப் பேரியக்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. “திராவிடக் களஞ்சியத் தொகுப்புகளில், தமிழைத் திராவிட மொழிகளுள் ஒன்று என்றும், தமிழரைத் திராவிடர் என்றும் வலியுறுத்தும் தமிழின மறைப்புதான் நடைபெறவுள்ளது. மற்ற மொழிகளுக்குத் தாய்மொழியாக உள்ள தமிழின் தொன்மை - ஆற்றல் ஆகியவற்றை மறைக்கும் செயல்தான் இதனால் மிஞ்சும். திராவிட மொழிப் பட்டியலில் கூறப்படும் தெலுங்கு, கன்னடம், மலையாளம் பேசுவோர் மகிழ்ச்சி அடைவர்.

---

# பறவைகள்

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

‘அங்க என்ன நடந்தது’ என்று கேட்டாள்.

‘அவன் தான் வேண்டிய பதக்கங்களையும், விளையாட்டில வேண்டிய கிண்ணங்களையும் என்னட்ட காட்டித் தன்னைப் பற்றிதான் ஒரே புழுகு. என்னைப்பற்றி ஒன்றுமே கேட்கயில்லை. திரும்பி வரயிக்கைகூட ‘பாய்’ சொல்லிப் போட்டு கதவைப் படார் என்று சாத்திக்கொண்டு உள்ள போயிட்டான். ‘எப்படி வந்தாய்? வீட்டை கொண்டு வந்து விட்டுவிடவா?’ என்றுகூடக் கேட்கயில்லையம்மா!’

‘சிலபேர் இப்படித்தான் பிள்ளை, சுயநலமாய் தங்களைப் பற்றி மட்டுமே நினைச்சுக் கொண்டிருப்பாங்கள். அவைகளைக் குறைசொல்ல முடியாது! இஞ்சை எல்லாமே செலவு முதற்கொண்டு ஐம்பது - ஐம்பது எண்ட மாதிரி அவையள் வளர்ந்த விதம் அப்படி!’

‘அப்போ அவனுக்கும் எனக்குமான உறவு அவ்வளவுதானா, எனக்கெண்டு ஓர் இடமில்லையா?’

‘அது உன்னைப் பொறுத்தது, விட்டுக்கொடுப்புகள், தியாகங்கள் எண்டு நிறைய செய்ய இருக்கு. நல்ல பக்கத்தைத்தான் இதுவரை நீ பார்த்திருக்கிறாய், திருமணம் எண்டு வந்தால் இன்னுமொரு மறுபக்கமும் இருக்கு!’

‘இப்படிப்பட்டவையோட காலமெல்லாம் வாழமுடியும் எண்டு நினைக்கிறியாம்மா?’

தாயிடம் புத்திமதி கேட்கிற அளவிற்கு ஏதாவது நடந்திருக்குமோ? மரகதம் பதில் ஒன்றும் சொல்லாமல் மகளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

‘அம்மா இனி நானும் ஹரியும் நல்ல நண்பர்களாக மட்டும்தான் பழகப் போகிறோம். எங்களுக்குள்ளே உள்ள உறவு அவ்வளவுதான்!’ என்று சொல்லிவிட்டு கைகழுவிக் கொண்டு மாடியில் உள்ள தனது அறையை நோக்கி மாடிப்படிகளில் ஏறினாள்.

‘அவ்வளவுதான் எண்டால்..?’ எதையோ அறிந்து கொள்ளும் ஆவலில் கீழே இருந்தபடி மரகதம் குரல் கொடுத்தாள். ‘நோமோர் டேட்டிங்!’ நின்று நிதானமாகப் பதில் சொன்னாள் மாலதி.

‘அம்மாடி!’ என்று அதற்காகவே காத்திருந்ததுபோல நிம்மதிப் பெருமூச்சு விட்ட மரகதம், ஏதோ ஒரு இனம்புரியாத சுமையைத் தற்காலிகமாக இறக்கி வைத்த ஒரு தாயின் சுகத்தை அந்தக் கணத்தில் அனுபவித்தாள்.

# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I


நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

- 1, 2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவு செய்க.


1. 

(1) (2) (3)

2. 

(1) (2) (3)

3. உரு A ஐ ஒத்த ஓர் உருவைப் பெறுவதற்காக உரு B இல் செய்ய வேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை எத்தனை?



உரு A உரு B

(1) 2 (2) 3 (3) 4

- 4, 5 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள எண் பிரசினங்களில் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான எண்களைத் தெரிவு செய்க.

4.
```
2   4   5
1 ........ 8
3 ........ 3
```
(1) 4, 8 (2) 3, 8 (3) 6, 1


5.
```
4   7   8
3 ........ 9
1 ........ 9
```
(1) 5, 2 (2) 3, 4 (3) 4, 2

6. முதலில் தரப்பட்ட உருவை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது அது தோற்றும் விதத்தைத் தெரிவு செய்க.




(1) (2) (3)


- 7, 8 ஆகிய வினாக்களில் கட்டத்தினுள் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உரு எது?

7. 

(1) (2) (3)

8. 


(1) (2) (3)

9. 

ஒரு விரிக்கப்பட்ட சதுரமுகியின் உரு இங்கு காணப்படுகிறது. இதனை ஒரு சதுரமுகியாக மறுபடியும் தயார் செய்யும் போது எதிர்முகங்களில் இருக்கும் எண்களின் கூட்டுத்தொகை 7 ஆக அமைவதற்கு உருவின் A, B ஆகிய முகங்களில் வரவேண்டிய எண்கள் முறையே எவை?

(1) 4, 6 (2) 5, 4 (3) 4, 5


10. ஒரே அளவுடைய 7 அட்டைப் பெட்டிகளின் சில முகங்களில் பசையைப் பூசி அவற்றை ஒட்டி ஆக்கப்பட்ட உரு ஒன்று அருகே தரப்பட்டுள்ளது.



பசை பூசி இணைக்கப்பட்ட பெட்டிகளின் முகங்கள் எத்தனை?

(1) 6
(2) 10
(3) 12

11. பின்வரும் உருக்களில் உள்ள எண்கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.




(1) 46 (2) 47 (3) 68

# மட்டு. காத்தான்குடியை சேர்ந்த நபரே நியூசிலாந்தில் கத்தி குத்து தாக்குதல்

காத்தான்குடி, செப். 05

**நியூசிலாந்தில் கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்டு ஆறு பேரைக் காயப்படுத்திய இலங்கையர் தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது.**

எம்.சம்சுதீன் அதில் அல் அஸ்கார் கவுறடி வீதி, காத்தான்குடி - 01, மட்டுக்களப்பைச் சேர்ந்தவரே இவ்வாறு தாக்குதலை மேற்கொண்டுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

1989ஆம் ஆண்டு பிறந்த இவர் தனது 7 வயதில் வெளிநாடு சென்றுள்ளார்.

இவர் கொழும்பு இந்துக் கல்லூரியில் கல்வி கற்றுள்ளார் எனவும், பின்னர் 2011ஆம் ஆண்டு நியூசிலாந்துக்குச் சென்றுள்ளார் எனவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர் 4 சகோதரர்களைக் கொண்ட குடும்பத்தில் கடைசிப் பிள்ளையாகப் பிறந்துள்ளார் என்று தெரியவந்துள்ளது. ஒரு பெண் சகோதரியும் தந்தை யாரும் கனடாவில் வசிக்கும் நிலையில், ஏனைய இரண்டு சகோதரர்களும் கட்டார், சவூதியில் வசிக்கின்றனர்.

கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்ட குறித்த நபர் நியூசிலாந்து பொலிஸாரால் நேற்றுமுன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)



# கொரோனாவால் அக்காவும் தம்பியும் வீட்டிலேயே மரணம்

கம்பஹா, செப். 05

கொரோனா வைரஸ் தொற்றால் அக்காவும், தம்பியும் வீட்டுக்குள்ளேயே உயிரிழந்துள்ள பெருந்துயர் சம்பவம் கம்பஹா மாவட்டத்தின் பூகொடை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வீட்டுக்குள் இருந்து அவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஆடைத்தொழிற் சாலையொன்றில் பணிபுரியும் 43 வயதுடைய அக்காவும், ஓட்டோ சாரதியாகப் பணியாற்றும் 38 வயதான தம்பியுமே இவ்வாறு உயிரிழந்தனர்.

மீட்கப்பட்ட சடலங்கள் வத்துபிட்டிவல வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (இ)

# இணையவழி கற்பித்தல் செலவுகளை ஈடுசெய்யவே ரூ.5,000 கொடுப்பனவு

## கல்வி அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு

கொழும்பு, செப். 05

இணையவழி கற்பித்தலுக்கான செலவுகளை ஈடுசெய்யும் நோக்கிலேயே அதிபர்கள், ஆசிரியர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது எனக் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

“ஒன்றரை ஆண்டுகளாக அரசு அவர்களுக்கான சம்பளத்தை உரியவாறு வழங்கி வருகின்றது.

இந்தநிலையில், தற்போது அதிபர்கள், ஆசிரியர்களுக்கு இணையவழி கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக ஏற்பட்டுள்ள மேலதிக செலவுகளுக்காகவே இரண்டு மாதங்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை வழங்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது” - என்றார். (இ)



# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 739 பேர் கைது!



கொழும்பு, செப். 05

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 739 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது 70 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்நிலையில், தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 64 ஆயிரத்து 647 ஆக உயர்வடைந்துள்ளது.

அதேபோன்று மேல் மாகாணத்துக்கு உட்பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் நேற்றுமுன்தினம் 1,335 நபர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் 1959 வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ)

# கசிப்பு காய்ச்சிய நபர் மாட்டினார்!

மஸ்கெலியா, செப். 05

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊர டங்கு உத்தரவு அமுலில் உள்ள நிலை யில், பாழடைந்த வீடொன்றில் மிகவும் சூட்சுமமான முறையில் கசிப்பு உற்பத்தி யில் ஈடுபட்டு வந்த நபரை மஸ்கெலியா பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட் பட்ட சாமிமலை - கவவலை பாடசாலை சந்திப் பகுதியில் வைத்தே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து கசிப்பு தயாரிப்புக் காகத் தயார் நிலையில் இருந்த 60 ஆயிரம் மில்லிலீற்றர் கோடாவும் மற்றும் 35 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளன. கசிப்பு காய்ச்சுவதற்குப் பயன் படுத்தப்படும் உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன. (இ)

# போதைப்பொருட்களுடன் எழுவர் பொலிஸாரிடம் வசமாக சிக்கினர்

கொழும்பு, செப். 05

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சுற்றிவளைப்புகளில் 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் பல இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காதர்னான தோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 50 கிராம் 240 மில்லிகிராம் ஹெரோயினுடன் 29 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இங்கிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹந்தப்பன்கொட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 17 கிராம் 61 மில்லிகிராம் ஹெரோயினுடன் 33 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிராண்டபாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 75ஆம் தோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 13 கிராம் 450 மில்லிகிராம் ஹெரோயினுடன் 32 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போதி ராஜ மாவத்தையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 5 கிராம் 270 மில்லிகிராம் ஹெரோயினுடன் 33 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்தம்ம தோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 5 கிராம் 902 மில்லிகிராம் ஹெரோயினுடன் 35 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மினுவாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடித்தகம பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 5 கிராம் 140 மில்லிகிராம் ஹெரோயினுடன் 23 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கந்தான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலசூரிய மாவத்தை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சட்டவிரோத மதுபான தயாரிப்புக்காக பயன்படுத்துவதற்குத் தயார் நிலையிலிருந்த 1080 லீற்றர் கோடாவுடன் 42 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கந்தான பிரதேசத்தைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். (இ)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 24 - 06 - 1950 |  | 03 - 09 - 2021 |

## திருமதி பாக்கியம் தம்பிராசா

**காரைநகர் - நல்லூர்**

யாழ். காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியம் தம்பிராசா நேற்றுமுன்தினம் (03.09.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லாச்சி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், லோகேஸ்வரனின் (ஈசன் - அவுஸ்திரேலியா) அன்புத் தாயாரும், கலைவாணியின் அன்பு மாமியாரும், நாகேஸ்வரி (நாகம்மா), சடாச்சரம், காலஞ்சென்றவர்களான கனகம்மா, பரமநாதன் மற்றும் மாணிக்கம், தவமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற பரஞ்சோதி, பொன்னம்மா, காலஞ்சென்ற நமசிவாயம் மற்றும் உலகநாதன் (சந்திரன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.09.2021) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் நல்லூர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 44/16, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
**மகன்**

**தொடர்புகளுக்கு :**
**774339427**

## 46/1 பிரேரணையின்...

வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் ஆறு பக்கங்களைக் கொண்ட இந்த விரிவான கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஜனநாய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், தமிழ் தேசிய கட்சியின் தலைவர் சிறீகாந்தா மற்றும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் ஆகியோரின் கையொப்பத்துடன் விரிவான அறிக்கை ஒன்று ஐ.நா. மனித உரிமை ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் ஆரம்பமாகும் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரில் 46/1 பிரேரணை பற்றிய மனித உரிமை ஆணையாளரின் வாய்மூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட இருக்கிறது. 46/1 பிரேரணையை இலங்கை அரசாங்கம் நிராகரித்து இருக்கிறது. முக்கியமாக ஆதாரங்களைத் திரட்டுவதற்கான அதிகாரத்தை மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துக்கு கடந்த கூட்டத்தொடரில் மனித உரிமை பேரவை வழங்கியிருந்தது.

இதற்கான நிதி ஒதுக்கீடு இடம்பெற்று அலுவலர்கள் நியமிக்கப்பட்ட நிலையிலே ஆதாரங்களை திரட்டுவதற்கு மனித உரிமை ஆணையம் தயாராகி உள்ளமையை தெரிவித்துள்ளது. அதன் அடிப்படையில் முக்கியமாக கருதப்படுகின்ற எதிர்வரும் மனித உரிமை பேரவையின் அமர்வில் நீதி பொறிமுறைக்கான நடவடிக்கைகள் முன்னேற்றத்தை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வேளையில் 46/1 பிரேரணைக்கு பின்னராக அரசாங்கம் கட்டவிழ்த்துவிட்ட தமிழ் இனத்துக்கு எதிரான நடவடிக்கைகளை அறிக்கையிடுவது என தமிழ் தேசிய கட்சிகளின் ஒருமித்த நிலைப்பாடாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. இரு வாரங்களுக்கு முன்னர் மெய்நிகர் நிகழ்வாக இடம்பெற்ற கூட்டத்தில் இது தொடர்பில் தீர்மானம் எட்டப்பட்டிருந்தது. அதன்படி தமிழ்க் கட்சிகள் ஐந்தின் தலைவர்களுடைய கையொப்பத்துடன் இந்த விரிவான அறிக்கை ஒன்று ஐ.நா. மனித உரிமை ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் 46/1 பிரேரணைக்கு பின்னராக தமிழர் தாயகத்தில் இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் தமிழினத்துக்கு எதிரான விடயங்களான காணி அபகரிப்பு, தொல்லியல் சார்ந்த நடவடிக்கைகள், நினைவேந்தல்களுக்கான தடைகள், பயங்கரவாத தடை சட்டத்தின் அடிப்படையிலான கைதுகள், சட்ட நடவடிக்கைகள், தடுத்து வைத்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகங்களில் இராணுவ அதிகாரிகளை நியமித்தல், காணாமல் ஆக்கப்பட்டோரை தேட வேண்டிய அவசியம் இல்லை என்ற அரசாங்கத்தினுடைய நிலைப்பாடு, பொத்துவில் இருந்து பொலிகண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சி பயணத்தின் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் விசாரணைகள், கைதுகள், அண்மையில் அரசினால் அறிவிக்கப்பட்ட அவசரகாலச் சட்டத்தினாலும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அபாயநிலைகள் என்ற விடயங்களை உள்ளடக்கப் பட்டுள்ளன.

## தமிழ் அரசு...

யினராக கடிதம் அனுப்பும் முடிவுக்கு வந்துள்ளனர் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத் தொடரை ஒட்டி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையாருக்கு தமிழர் தரப்பின் சார்பில் கடிதம் அனுப்புவதற்கு கூட்டாக கட்சிகள் முடிவு எடுத்தன. இந்த நிலையில், 5 தமிழ்த் தேசியக் கட்சிகள் சேர்ந்து நேற்று கடிதம் அனுப்பிய நிலையில், இலங்கை தமிழ் அரசுக் கட்சியும் தனியாக கடிதம் ஒன்றை அனுப்ப முடிவு செய்தது. இதில், அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே கையொப்பமிடுவது என்று முடிவானநிலையில், அந்தக் கடிதத்தில் "இராணுவமும், விடுதலைப் புலிகளும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள், மனித உரிமைகளை மீறியுள்ளனர். இவற்றில் சில போர் குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களாகக் கருதப்படும்" என்று பான் கீ மூனின் நிபுணர் குழு அறிக்கையின் விடயமும் அந்தக் கடிதத்தில் சேர்க்கப்பட்டிருந்தது.

இதற்கு தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். அத்துடன், அந்த விடயத்தை நீக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். அத்துடன் இந்தக் கடிதத்தை தயாரித்த சுமந்திரன் எம். பிக்கு தெரியப்படுத்த முயற்சி செய்யப்பட்டது.

இது தொடர்பில் எதிர்ப்பு தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், எங்களுடைய கருத்தை கணக்கில் எடுக்காது விட்டால், மனித உரிமைகள் ஆணையாளருக்கு நாம் தனித்து கடிதம் ஒன்றை அனுப்புவோம். தற்போது தயாரிக்கப்பட்ட கடிதத்தில் கையொப்பம் இடமாட்டார் என்று தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் கடிதம் பெரும்பாலும் இன்று அல்லது நாளை மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படும் என்று தெரிய வருகின்றது.

## வடக்கில் 102...

படுத்தப்பட்டன. இதில் 102 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதன்படி, யாழ். போதனா மருத்துவமனையில் 12 பேர், கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் 9 பேர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 5 பேர், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 2 பேர், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் 2 பேர், யாழ். மாநகரம், சாவகச்சேரி, சங்கானை மருத்துவ அதிகாரி பிரிவுகள், பருத்தித்துறை ஆதார மருத்துவமனை என்பவற்றில் தலா ஒருவர் என யாழ். மாவட்டத்தில் 34 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் முசலி மருத்துவ அதிகாரி பிரிவில் மட்டும் 24 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி மருத்துவ அதிகாரி பிரிவில் 12 பேர், பளை பிரதேச மருத்துவமனை, பொது மருத்துவமனை, பளை மருத்துவ அதிகாரி பிரிவு என்பவற்றில் தலா ஒருவர் என 15 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

மல்லாவி ஆதார மருத்துவமனையில் 6 பேர், மாந்தை கிழக்கு மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேர், புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் 2 பேர், பொது மருத்துவமனையில் இருவர் என 13 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டது.

வவுனியா பொது மருத்துவமனையில் 8 பேர், பூவரசங்குளம் பிரதேச மருத்துவமனை, மாமடு பிரதேச மருத்துவமனை என்பவற்றில் தலா ஒருவர் என வவுனியா மாவட்டத்தில் 10 தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

தவிர, இரணைமடு விமானப்படை முகாம், முழங்காவில் கடற்படை முகாமில் தலா ஒருவர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர். (ஐ)

## 3,333 தொற்றாளர்...

இதன்படி நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 82 ஆயிரத்து 476 ஆக அதிகரித்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (இ)

# ரூ. 310 கோடி மதிப்பான ஹெரோயின் கைப்பற்றல்

கொழும்பு, செப். 05

310 கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்பு கொண்ட மற்றொரு ஹெரோயின் கடத்தலை இலங்கை கடற்படை முறியடித்துள்ளது. இதன்போது 336 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச கடற்பரப்பின் உளவுதுறை சேவைகளுடன் இணைந்து நடத்தப்பட்ட நடவடிக்கையிலேயே இந்த போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது என்றும், இதன்போது, 7 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட படகு நீண்டநாள் மீன்பிடி படகு என்ற போர்வையில் கடலில் நடமாடியது. எனினும், இந்தப் படகு குறித்து கிடைத்த தகவல்கள் மற்றும் நுண்ணறிவு திறனால் இந்த போதைப் பொருள் கடத்தல் முறியடிக்கப்பட்டதாக கடற்படை கூறியது. நேற்றைய தினம் கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்ட கப்பலை பாதுகாப்பு செயலாளர் கமல் குணரட்ன நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## கோதுமைக்கும்...

அதிக விலைக்கு விற் பனை செய்வதை தடுக்க நுகர் வோர் விவகார அதிகார சபை தொடர்ந்தும் சோதனைகளை முன்னெடுத்து வருகின்றது.

இதுவரையில் மேற்கொண்ட திடீர் சோதனைகளில் 32 ஆயிரத்து 597 தொன் சீனி மற்றும் 643.5 தொன் நெல் மீட்கப்பட்டுள்ளன என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## தமிழ்க் கட்சிகளின்...

ஐந்து தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிட்டுள்ள அறிக்கை ஒன்று நேற்றைய தினம் பேரவைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதில் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவும் கையொப்பமிடுவார் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், இறுதியில் அவரது கையொப்பம் பெறப்படாத நிலையிலேயே இந்தக் கடிதம் அனுப்பப்பட்டது.

அதேவேளையில், தமிழரசுக் கட்சி தனியான கடிதம் ஒன்றை அனுப்பிவைக்கவுள்ள அதேவேளையில், அதிலுள்ள சில விடயங்களில் உடன்படமுடியாது எனத் தெரிவித்துள்ள மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் தனியான கடிதம் ஒன்றை அனுப்புவதற்குத் திட்டமிடுகின்றார்கள். இதனைவிட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனியான கடிதம் ஒன்றை அனுப்பிவைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அடக்குமுறை...

வலைத்தள செயல்பாட்டாளர்களுக்கு எதிராக அடக்குமுறைகளை பிரயோகிப்பதையும் அவர்களை அச்சுறுத்துவதையும் அரசாங்கம் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று சர்வதேச யூரர்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில்,

"கோவிட் - 19 வைரஸ் பரவல் கட்டுப்பாட்டை அரசாங்கம் கையாளும் முறை தொடர்பில் தகவல்களை அறிந்துகொள்வதற்கான உரிமை, கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம் மற்றும் தர்க்கங்களில் ஈடுபடுவதற்கான இடைவெளி ஆகியவை பாதுகாக்கப்படுவது அவசியமாகும்" என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தெரிவித்திருக்கின்றது.

தொற்று நோய்ப்பரவலுக்கு மத்தியில் பொதுமக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமெனின், தவறான தகவல்கள் பரப்பப்படுவதைத் தடுப்பதற்கு சட்டரீதியான ரீதியான நடைமுறையொன்று காணப்படவேண்டும். கோவிட் - 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான விதிமுறைகளை ஒரு காரணமாகக்கூறி இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் அடக்குமுறைகள் செயல்பாடுகள், சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக தகவல் அறியும் சுதந்திரம் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான அதன் கடப்பாடுகளை மீறுவனவாகவே அமையும்.

அதுமாத்திரமன்றி சுகாதாரத்துடன் தொடர்புடைய தகவல்களை அறிந்துகொள்வதற்கான பொதுமக்களின் உரிமையிலும் இடையூறை ஏற்படுத்தும் - என்று கூறப்பட்டுள்ளது. (ஐ)

## 10 ஆயிரத்தை...

ளார்.

அதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 9 ஆயிரத்து 951 ஆக உயர்வடைந்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 145 பேரில் 68 பெண்களும், 77 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் ஆண்கள் மூவரும், பெண் ஒருவரும் என 04 பேர் 30 வயதுக்குட்பட்டவர்களாவர். 19 ஆண்கள், 05 பெண்கள் என 24 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 117 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 55 ஆண்களும், 62 பெண்களும் அடங்குகின்றனர். (இ)

## பி.சி.ஆர். எடுக்க...

நேற்று காலை காரைநகர் மருத்துவ அதிகாரி பிரிவு பணிமனையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

காரைநகர் மருத்துவ அதிகாரி பிரிவில் அண்மையில் சட்டம், சுகாதார விதிகளை மீறி அதிகளவானோரின் பங்கேற்புடன் திருமண நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. இதுபற்றி முகநூலில் பகிரப்பட்ட படங்களில் எவரும் முகக்கவசம் - சமூக இடைவெளியை கடைப்பிடிக்காமை வெளிப்பட்டது. இதையடுத்து திருமண நிகழ்வில் பங்கேற்றவர்கள் அடையாளம் காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்த நிலையில், நேற்று அவர்களுக்கு பி. சி. ஆர். பரிசோதனை நடத்தப்பட்டது. இதன்போது ஒருவர் ஒத்துழைக்க மறுத்தார். இந்த நிலையில், அவரின் மகன்கள் இருவர் அந்த இடத்தில் நின்ற காரைநகர் மருத்துவ அதிகாரியை தாக்க முயன்றனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, பி. சி. ஆர். பரிசோதனைக்கு ஒத்துழைக்க மறுத்தமை, மருத்துவ அதிகாரியை தாக்க முயன்றமை, பொது இடத்தில் குழப்பம் ஏற்படுத்தியமை ஆகிய குற்றங்களின் கீழ் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மொத்த....

(07ஆம் பக்கம் தொடர்ச்சி)

ஆயிரக்கணக்கானோர் கூடியிருந்தனர். மெலிந்த உடல் கொண்ட லுங்கி அணிந்த ஒருவன், கடப்பாரையால் கருணாநிதியின் சிலையை உடைத்த காட்சியை அவர் புகைப்படமாகவும் எடுத்தார். அந்த சம்பவத்துக்கான ஒரே ஆவணமாக அது விளங்குகிறது. அது பத்திரிகைகளில் முதல் பக்கத்தில் வெளியானபோது, திமுக பத்திரிகையான முரசொலியில், "அவனாவது மார்பில் குத்தினான், மற்றவர்கள் முதுகில் குத்தினார்கள்" என்று கருணாநிதி எழுதினார்.

அரசியல் என்பது, முதுகில் குத்தும் கொடூர விளையாட்டாகத்தானே இருக்கிறது! ஆனால் நமக்குப் பின்வரும் தலைமுறையினர், 'இழிவானவர்களின் கடைசி முயற்சியே அரசியல்' போன்ற பழமொழிகளை அறியாதவர்களாகவும், அரசியல் என்றால் சமூகத்துக்கு சேவை செய்வது என்பதை மட்டுமே புரிந்து கொண்டவர்களாகவும் இருக்கட்டும். நம்புவோம்.

ஈழநாடு
Eelanadu

# ஊரடங்கு சட்டம் நீடிப்பு எதிர்க்கட்சி வரவேற்பு

## தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டத்துக்கு ஒத்துழைப்பு என்கின்றார் அப்புஹாமி



கொழும்பு, செப். 05

**கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை நீடிப்பதற்கு அரசு எடுத்த தீர்மானத்தை வரவேற்பதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**

எனினும், ஐக்கிய மக்கள் சக்தி என்ற வகையில் நாம் இவ்வாறு நாட்டை முடக்குமாறு கூறவில்லை. நாட்டிலுள்ள சகல மக்களும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகாது பாதுகாக்கும் வகையிலேயே நாட்டை முடக்குமாறு கோரினோம் என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் மற்றும் கட்சியின் உறுப்பினர்களின் தீர்மானத்துக்கு அமைவாக, கொரோனாப் பேரழிவு இருளை அகற்றி 'விளக்கேற்றப்பட்ட பிரார்த்தனை' என்ற தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் விளக்கேற்றும் நிகழ்வை நடத்தியிருந்தோம். இந்த நிகழ்வை சிறப்புற நடத்தியமைக்காக நாம் அனைவருக்கும் முதலில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கொரோனா வைரஸ் தொற்றால் மரணித்தவர்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் எமது பெற்றோர், சகோதார, சகோதரிகள், பிள்ளைகள், தோழர்களாவர். அவர்களது ஆன்மா சாந்தியடைய வேண்டும் என்று நாடளாவிய ரீதியில் விளக்கேற்றி பிரார்த்தனையில் ஈடுபட்டோம்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள எமது பெற்றோர், சகோதர, சகோதரிகள், பிள்ளைகள், தோழர்கள் அனைவரும் விரைவில் குணமடைய வேண்டும் என்று மற்றுமொரு பிரார்த்தனையையும் நடத்தினோம்.

அதேபோன்று சுகாதாரத்துறை, பாதுகாப்புத்துறையைச் சேர்ந்தவர்களையும் பாதுகாக்குமாறும் கோரியே பிரார்த்தனை மேற்கொண்டோம்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் எதிர்வரும் 13ஆம் திகதிவரை தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டமையை நாம் வரவேற்கின்றோம்.

இந்தத் தீர்மானத்தை நாம் வரவேற்பதுடன் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாட்டை முடக்கினாலும் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தடுப்பூசி வழங்கல் செயற்றிட்டத்துக்கும் நாம் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டத்துக்கு எம்மால் வழங்கக்கூடிய அனைத்து ஒத்துழைப்புகளையும் நாம் வழங்குவோம்" - என்றார். (இ)




சுட்டு படுகொலைசெய்யப்பட்ட

## 'சன்சைன் சுத்தா'வுக்கு கொரோனா தொற்று

கொழும்பு, செப். 05

மாத்தறை, வெலிகம கொடவில பிரதேசத்தில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட "சன்சைன் சுத்தா" என அழைக்கப்படும் பாதாள உலகக் குழு உறுப்பினர் ஹெட்டிஹேவகே அமில பிரசன்னவுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர், நேற்றுமுன்தினம் மதியம், கொடவில, வரகாபிடிய பாடசாலை வீதியில், காரில் பயணித்தபோது, இனந்தெரியாத நபர் ஒருவரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

31 வயதுடைய சன்சைன் சுத்தா, மாத்தறை மிரிஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த பிரபல போதைப்பொருள் வர்த்தகர் ஆவார்.

எவ்வாறாயினும், அவரின் சடலம் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், சன்சைன் சுத்தாவைக் கொலைசெய்யப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனம், மாத்தறை பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (இ)

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 12 - 07 - 1951 | 03 - 09 - 2021 |

### திருமதி சரஸ்வதி சிவலிங்கம்

நவாலியைப் பிறப்பிடமாகவும், வவுனியா செட்டிக்குளம், கனடா Brampton ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சரஸ்வதி சிவலிங்கம் அவர்கள் கடந்த (03.09.2021) வெள்ளிக்கிழமை அன்று செட்டிக்குளத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (சின்னம்மான்) - தில்லைமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற கந்தையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், சிவலிங்கத்தின் அன்பு மனைவியும், சுகிதரன், சுமதி, சிவகௌரி, சைலா, தயாபரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், இன்பராணி, குகனகாந்தன், கிருபன், தயாளன், பானுகா ஆகியோரின் அன்பு மாமியாரும்,சரோஜா, ராஜேஸ்வரி, சந்திரா, இந்திரா, ரவீந்திரன், பாலகிருஷ்ணன், சாந்தினி, வசந்தினி, சங்கர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கஜானா, மனோஜன், லிதுஜன், ஜெனா, சாரங்கா, நிகிதா, டிசான், ஜெசிக்கா ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், ஆரன், ஆபரன், வர்சினி, இளம்மருகன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (04.09.2021) சனிக்கிழமை அன்று தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
சுதன் - மகன்
Mobile : +14168206253

தகவல்
குடும்பத்தினர்.

## வேலுகுமார் எம்.பிக்கு எதிராக ஜனாதிபதியிடம் முறைப்பாடு

### இ.தொ.கா. உப தலைவர் தெரிவிப்பு



நுவரெலியா, செப். 05

ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.வேலுகுமார் வெளியிட்டுள்ள கருத்து தொடர்பில் ஜனாதிபதியிடம் முறையிடப்படும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளர் சச்சிதாநந்தன் தெரிவித்தார்.

கொட்டகலையில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், அரசு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுடன் இணைந்து தோட்டக் காணிகளைத் தனியாருக்கு விற்றுள்ளார் என்று குறிப்பிட்டு சில தோட்டங்களைக் கூறினார்.

இது ஒரு பாரிய பிரச்சினை. அவருக்கு அரசியல் செய்ய முடியாத நிலையை மறைப்பதற்காக அதனை வேறு விதமாக வெளிப்படுத்துகின்றார். மக்களுக்கும் சேவை செய்யவில்லை. மக்களிடத்திலும் செல்ல முடியாது. இ.தொ.காவை விமர்சித்தால்தான் அரசியல் செய்ய முடியும் என்ற நிலைக்கு வந்துள்ளார்.

இது தொடர்பாக நாங்கள் ஜனாதிபதியிடம் முறையிடவுள்ளோம். எந்தவொரு அடிப்படைத் தன்மையும் இல்லாமல் இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைப்பது அநாகரிகமான செயல்" - என்றார். (இ)

## கொரோனா தொற்றாளர் தற்கொலை கண்டி வைத்தியசாலையில் சம்பவம்

கண்டி, செப். 05

கொரோனா வைரஸ் தொற்றிய நிலையில் சிகிச்சை பெற்று வந்த நபர் ஒருவர், தற்கொலை செய்துகொண்டுள்ள சம்பவம் கண்டியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

38 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே, கண்டி வைத்தியசாலையின் 5ஆவது மாடியில் இருந்து குதித்து இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (இ)

## மதுபானசாலைகள் மூடியதால் 16,000 கோடி ரூபாய் நட்டம்

கொழும்பு, செப். 05

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில், மதுபானசாலைகள் மூடப்பட்டுள்ளதால் அரசுக்கு 16 ஆயிரம் கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது என மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் எம்.ஜே.குணசிறி ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட கடந்த மாதம் 20ஆம் திகதி முதல் எதிர்வரும் 13ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள்ளேயே இந்த நட்டம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். மதுபானசாலைகள் மூடப்பட்டுள்ளதால் நாளொன்றுக்கான நட்டம் 700 கோடி ரூபாய் என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.00 மணி : A.P.I.I.T NCUK PROGRAMME



10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-
திறமையாளர்களுக்கான களம்
7.00 மணி : SPOTLIGHT – யாழ் மாவட்ட
நாடாளுமன்ற உறுப்பினர்
சிவஞானம் சிறீதரன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி :செல்லாடுகளம் -மாசற்ற மாநகரம்
10.00 மணி:-நேர்கொண்ட பார்வை-பொலீஸ்
ஊடகபேச்சாளர்-தளுவத்த



**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள்
(மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம்
(திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரீஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு